சித்திர ராமாயணம்

வாலி காவியம்

331. இறுதிக் காட்சி

வர பலம் இருக்கட்டும்; தேக பலம் இருக்கட்டும். வாலிக்கு விசேஷ மனோ பலமும் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாகக் குத்துச் சண்டையில் நிபுணன்.

பக்தியின் பயன்

வாலியின் சிவ பக்தி வரம்பில்லாத ஆற்றலுக்கு முரணாக இல்லாமல் அரணாயிற்று. 'பக்தி என்றால் பலவீனம்' என்று கருதுவது மதியீனம் என்பதை வாலி கதையும் மெய்ப்பிக்கிறது.

எனினும் வாலிக்கு வால் போல் பயன் பட்டதுதான் பக்தியும். சிவ பெருமானது அருளாகிய துறையில் முதிர்ந்தவன் வாலி யென்று அனுமன் கூறிய போதிலும், வாலி சிவ ஞானி யல்ல; மெய்யறிவு படைத்து மெய்வழி கண்டு நடப்பவனல்ல. உண்மையான பக்திப் பெருஞ் செல்வனாக இருந்தால்,

உரிமை என்(று) இவற்(கு)
உரிய தாரமாம்
அருமருந்தையும்
அவன்விரும்பினன்



என்று 'குற்றச் சாட்டு'க்கு இலக்காகியிருக்க மாட்டானே?

குத்துச் சண்டையில் நிபுணன், பூஜை ஜபம் முதலியவற்றால் சூட்சும சக்திகளைப் பெருக்கிக் கொள்வதிலும் நிபுணனாகி, வர பலம் மனோ பலம் ஆகியவற்றை வரம்பில்லாமல் அபிவிர்த்தி செய்து கொண்டான் என்று கருதுவது தவறாகாது.

குத்துச் சண்டையில் தோள்வலி

கடல் கடைந்த கதை வாலியின் தோள் வலிக்குச் சான்று. வாலியின் தோற்றத்திற்கு விசேஷ வீரப் பொலிவும், எதிரிகளை நடுங்கச் செய்யும் காம்பீர்யமும் தந்தன வாலியின் பெரிய தோள்கள். வெற்றி மாலை புரண்ட மார்பும் தோள்களும் வாலிக்கு ஒரு கொடிய் பயங்கர வசீகரம் அளித்தன.

வாலியின் வாலே ராவணனையும் பயமுறுத்தி விட்டதென்று கதை. வாலியின் வால்—வலிக்கும் அரணாகிய தோள்வலிக்கு ராவணனும் தோற்றான் என்றுதானே பொருள்?

மாயாவி என்ற அசுரனை ஓட்டி ஒழித்ததற்கும் இத்தோள் வலிமை ஒரு முக்கிய காரணம். 'ஆள் வலிமையெல்லாம் தோள் வலிமை' என்றிருந்த பழைய காலத்தில் எதிரிகளுக்கு எமனாக இருந்தது வாலியின் தோள் வலிமை.

குத்துச் சண்டையில் நிபுணனாக இருந்த வாலிக்குத் தோள்வலிமை வெற்றிக்குப் பெரிதும் துணையாயிற்று. 'அடல் கடந்த தோள் அவனை அஞ்சி' என்று அனுமனும் ஒப்புக் கொள்கிறான். அந்த வலிமை மிக்க தோள்களுக்கு அஞ்சிக் குடல் கலங்கி ஒளித்துக் கொண்டார்களாம் வானர வீரர்கள்.

அத்தகைய தோள் வலிமைக்குத் தோற்று உலைந்து கலகலத்துப் போனான் சுக்கிரீவன் என்பதைத்தான் அனுமன் ராமனிடம்,

கடல்க டைந்தவெங்
கரத லங்களால்,
உடல்க டைந்தனன்,
இவன்உ லைந்தனன்

என்று சுருங்கக் கூறி விளங்க வைத்தான்.

இந்தத் தோள்வலிமை விளங்க வாலி மலையினிடையே ஒரு மேட்டில் வந்து நின்றதும்,

தன்தோள் வலியால்
தகைமால்வரை
சாலும் வாலி,

[தகைமால்வரை சாலும் — அழகிய பெரிய மலையை ஒத்த.]

நரசிங்கம்போல் ஒரே உக்கிர சௌந்தரியமாகத் தோன்றுகிறான். இந்தத் தோள்வலிமையும் தோற்றமும் ராமனையும் பிரமிக்கச் செய்துவிட்டன.

துணிவே அதிசயம்

இத்தகைய வாலியுடன் சுக்கிரீவன் நெருங்கிப் போர் செய்ய வந்ததே அதிசயம்தான். முட்டியும், சாரி திரிந்தும், சுழன்றும் போர் செய்யத் துணிந்தது அதிசயத்திலும் அதிசயம். தோளோடு தோள் தேய்த்தும், அந்தத் தோள்களில் துணிந்து குத்தியும், அந்தத் தோள்களைச் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் தன் கைகளால் ஓங்கி அறைந்தும் சுக்கிரீவன் போர் செய்தானே, அது ஆச்சரியம், ஆச்சரியம்!

உடனே தோற்றுப் போகாமல் அவ்வளவு நேரம் சுக்கிரீவன் சமமாகச் சமாளித்து நின்றது பேராச்சரியம். சுக்கிரீவனின் ராமபக்திதான் இவ்வளவு அபாரமாகத் தன்னம்பிக்கையைத் தூண்டி ஜொலிக்கச் செய்து, இந்த 'அற்புத'த்தை நிகழ்த்தியதென்று நாமும் நம்ப வேண்டியதுதான்.

கடைசியாக, சுக்கிரீவனைக் குத்திக் குமைத்து நிலைகுலைத்தான்,

வன்னெ டுந்தடந் திரள்புயத்(து)
அடுதிறல் வாலி.

[வல்நெடுந் தடந்திரள் புயத்து — வலிய, நீண்ட, பெரிய, திரண்ட தோள்களில். அடுதிறல் வாலி - பகைவரை அழிக்கும் வலிமைகொண்ட வாலி.]

துணிவும் நம்பிக்கையும்

முன்பு வாலி 'உடல் கடைந்'ததும், உடலும் உள்ளமும் ஒருங்கே உலைந்து நடுங்கி ஓடி ஒளித்துக்கொண்ட சுக்கிரீவன், இப்போது அடைந்த தோல்வியால் தன் நெஞ்சுத் துணிவை இழந்து விடவில்லை. இவனது துணிவையும் நம்பிக்கையையும் அணைய விடவில்லை பக்தி.

ராமன் அடையாள மாலை சூட்டி அனுப்பி வைத்ததும் அதை வெற்றி மாலை யென்றே மதித்தவன் போல் சுக்கிரீவன் மீட்டும் வந்து எதிர்க்கத் துணிகிறான்.

மிலைந்து செல்கென விடுத்தனன்;
எதிர்த்தனன் மீட்டும்.

[மிலைந்து செல்கென — சூட்டிக் கொண்டு செல்வாயாக என்றுசொல்லி. விடுத்தனன் — அனுப்பி வைத்தான்.]

'எதிர்த்தனன் மீட்டும்' என்பதிலுள்ள ஓசையே, சுக்கிரீவனின் புதிய



எதிர்ப்புச் சக்தியான நம்பிக்கையையும் நெஞ்சழுத்தத்தையும் அழுத்திக் காட்டுகிறது.

இந்த நெஞ்சுத் துணிவும் நம்பிக்கையும் வாலியையும் ஒரு கணம் பயமுறுத்திவிடுகின்றன!

வாலியைத் தாக்கும் சுக்கிரீவன்

இனி, மாலையும் கழுத்துமாகத் தலை நிமிர்ந்து செல்லும் சுக்கிரீவனைப் பார்க்க வேண்டாமா? போகும்போதே இவன் செய்யும் ஆரவாரத்தைத் தான் கேட்க வேண்டாமா? எவ்வளவு வேகமாய் வருகிறான்! வந்து எவ்வளவு வேகமாய்ப் புடைக்கிறான்!

'இது என்ன? கனவு காண்கிறேனா?' என்று வாலி திகைத்து நிற்க, சுக்கிரீவன் மறுபடியும் மோதியடிக்கிறான்.

'வாலி நிலைமையை உணர்ந்து தெளிவதற்குள், 'இதோ ஒன்று' 'இந்தா ஒன்று' 'வேறொன்று' 'இன்னொன்று' என்றெல்லாம் குத்துகள் விழுகின்றன வாலிமேலே.

வாலி தயாராவதற்குள் சுக்கிரீவனின் கை முஷ்டியிலிருந்து பல குத்துகள் விழுந்து விடுகின்றன.

இந்தச் சுக்கிரீவன் - கூத்தைப் பார்த்து விடுவோம், ஆரவாரங்களையும் கேட்டு விடுவோம், கவிதை வாயிலாக:

தயங்கு தாரகை நிரைதொடுத்
அணிந்தன போல (து)
வயங்கு சென்னியன், வயப்புலி
வானவல் ஏற்றே(டு)
உயங்கும் ஆர்ப்பினன், ஒல்லைவந்
அடுதிறல் வாலி (து)
பயங்கொளப்புடைத்(து) எற்
றினன்.
குத்தினன் பலகால்.

[தயங்கு — விளங்குகிற. தாரகை நிரைதொடுத்து — நட்சத்திரங்களை வரிசையாகத் தொடுத்து. அணிந்தனபோல வயங்கு சென்னியன் — (நட்சத்திர

மலர்களே மாலையாகத் தொடுக்கப் பெற்று) அணியப்பட்டன போல விளங்குகின்ற கழுத்தும் நிமிர்ந்த முடியுமாகச் செல்லும் சுக்கிரீவன். வயப்புலி — வலிய புலியும். வான வல் ஏற்றோடு — வானத்தில் முழங்குகிற வலிய பேரிடியும். உயங்கும் — வருந்தும்படியான. ஆர்ப்பினன் — ஆரவாரம் செய்து கொண்டே. ஒல்லை — விரைவாய். அடுதிறல் வாலி — (பகைவரை) அழிக்கும் திறமையுள்ள வாலி. பயம் கொள — பயம் கொள்ளும்படி. புடைத்து எற்றினன் — அடித்து மோதி. பலகால் - பல முறை.]

பாட்டைப் பாடிப்பாடி அனுபவிக்க வேண்டும். சங்கீத முறையில் அல்ல; கவிதையைப் பாடி அனுபவிக்கும் முறையில். சொற்கள் மறைந்து கவிதையும் போய்க் காட்சி காணும் ரீதியில் பாடவே, ஜில் ஜில் என்று மிளிரும் காட்டுப் பூக்கள் இயற்கையாகவே மாலை தொடுத்தது போலத் தோன்றும் அந்தப் பூங்கொடி மாலையுடன் கம்பீரமாக நிமிர்ந்து நிர்ப்பயமாக நடைபோட்டு விரைந்து போகும் சுக்கிரீவனைப் பிரத்தியட்சமாய்ப் பார்க்கலாம்.

புலியும் இடியும் நடுங்க இவன் கர்ஜிக்கும் கர்ஜனைகளும் காதில் விழுவது போலத் தோன்றுகிறது. திடீரென்று எழுந்த இந்த ஆரவாரங்கள் வாலியைத் திகைக்கச் செய்திருக்க வேண்டும்.

'பயந்து ஓடிப் போய் விட்டான். தூரத்திப் போய் ஒளிப்பிடம் கண்டு பயலை ஒரேயடியாகத் தொலைத்துத் தலைமுழுக்காட வேண்டியது தான்!' என்று இருந்த வாலிக்கு, 'போன மச்சான் திரும்பி வந்தான் புது மணத்தோடே' என்பது போலப் புதுமணம் வீசச் சுக்கிரீவன் வலிய வந்து—விசையாக வந்து—தன்னை அடித்தானென்றால், எப்படி நம்பமுடியும்?

சுக்கிரீவ கர்ஜனைகளைக் கேட்ட அந்தக் காதுகளை நம்பாவிட்டாலும், மாலையுங் கழுத்துமாய்த் தம்பி தலைநிமிர்ந்து நிற்பதைக் காணும் கண்களையே நம்பாவிட்டாலும், இவன் அடிக்கும் அடி, மோதித் தாக்கும் தாக்குதல்—இவையும் பொய்யா, சொப்பனமா? ஒரு குத்தா, இரண்டு குத்தா? அத்தனை குத்துகள் வேண்டியிருந்தன, வாலி விழித்துக் கொள்ள.

'மாண்டவன் மீண்டது போல்' இவன் மீண்டுவந்த இரகசியம் தான் என்ன? 'இதில் ஏதோ சூது இருக்கிறது, அபாயம் இருக்கிறது. மனைவியும் எச்சரிக்கை செய்தாளே,......அப்படி ஏதாவது இருக்குமோ?' என்ற சந்தேகங்கள் வாலிக்கு ஏற்பட்டனவா?

கோபம் சிரிக்கிறது!

ஆம்; சந்தேகங்கள் தோன்றின —வாலி அறிவாளியல்லவா? ஆனால், அறிவுத்தெளிவுடன் ஆலோசனைசெய்து பார்க்க அவகாசம் இல்லை. குத்துக்கு மேல் குத்து விழவே ஒரு கணம் அஞ்சிய வாலி, உடனே அச்சமும் நடுங்க, நமனும் நடுங்கச் சுக்கிரீவனை உறுக்கிப் பார்க்கிறான்.

பிறகு சிறுசிரிப்பாக வருகிறது சினம். வாலி கைகால்கள் வைரம் பாய்ந்து புடைக்கின்றன, அடிக்கின்றன; உதைக்கின்றன. சுக்கிரீவன் துடிக்கிறான்; மயங்குகிறான்:

அயிர்த்த சிந்தையன், அந்தகன்
 குலைகுலைந்(து) அஞ்சச்
செயிர்த்து நோக்கினன், சினத்தொடு
 சிறுநகை செய்யா,
வயிர்த்த கையினும் காலினும்,
 கதிர்மகன் மயங்க,
உயிர்த்தலந்தொறும்புடைத்தனன்
 அடித்தனன்;உதைத்தான்.

[அயிர்த்த சிந்தையன் - சந்தேகம் கொண்ட சிந்தையை உடையவனாய். அந்தகன் - யமன். செயிர்த்து நோக்கினன் - கோபித்து உறுக்கி நோக்கி.

சினத்தொடு சிறுநகை செய்யா - சினத்தால் சிறுநகை செய்து. வயிர்த்த - வைரம் கொண்ட. கையினும் காலினும் - கைகளாலும் கால்களாலும். கதிர்மகன் - சூரிய புத்திரனான சுக்ரீவன். உயிர்த்தலந் தொறும் - உடம்பில் மர்மஸ்தானங்களில் எல்லாம்.]

சுக்கிரீவனால் சமாளிக்க முடியவில்லை:

கக்கி னான்உயிர், உயிர்ப்பொடும்;
செவிகளிற் கண்ணின்
உக்க(து) ஆங்(கு)எரிப் படலை
யோ(டு)
உதிரத்தின் ஒழுக்கம்;
திக்கு நோக்கினன் செங்கதி-
ரோன்மகன்.

[கக்கினன் உயிர், உயிர்ப்பொடும் - 'பிராணனைக் கக்கிவிட்டான் இந்த மூச்சுடனே!' என்று சொல்லும்படி பெருமூச்சுவிடலானான். செவிகளின் கண்ணின் - செவிகளிலிருந்தும் கண்களிலிருந்தும். புக்கது-வெளிப்பட்டது. ஆங்கு — அப்போது. எரிப்படலையோடு - நெருப்பின் தொகுதியோடு. உதிரத்தின் ஒழுக்கம் - இரத்தப் பெருக்கு. செங்கதிரோன்மகன் — சுக்கிரீவன். செருக்கி-கர்வங் கொண்டு.]

வேறு கதியில்லாமல் ராமன் இருக்கும் திசையை நோக்கி விழிக்கிறான் சுக்கிரீவன். வாலியோ, 'இவனைப் பற்றியெடுத்துத் தரையில் மோதிக் கொன்று விடுவோம்' என்று கழுத்திலும் இடையிலும் கை கொடுத்துத் தூக்கி விடுகிறான்.

* * *

சூத்துச் சண்டையின் இறுதிக் காட்சி இது. சுக்கிரீவனுக்கே இறுதி விளைந்து விடும்போலத் தோன்றுகிறது.

ராமன் வில் நாணேற்றித் தயாராவதற்குள் துரிதமாகவே இந்த நாடகம் முடியப் பார்க்கிறது.

ஆனால் முடிவு தான் பலசாலி எதிர்பார்த்தபடி இல்லை.



332. வாலிமீது பாணம்

'இனிமேல் தப்ப விடமாட்டேன்; எப்படியாவது கொன்று தீர்த்து விடுவேன்' என்ற தீர்மானத்துடன் அண்ணன் தம்பியின் உயிர்த் தலங்களில் தாக்க, தம்பி ஆற்றமாட்டாதவனாய்ப் புதிய அண்ணன் இருந்த திசை நோக்கி விழித்தான்.

இந்த விழிப்பின் பொருள், 'உதவி இப்போதே கிடைக்கா விட்டால், இனி இந்தத் தம்பியை உயிருடன் பார்க்க முடியாது—முகத்தில் விழிக்க முடியாது' என்பது.

சோர்வும், வெறியும்

'வேறு செயலின்றி ராமனைத் திக்கு நோக்கிச் சரணாகதி செய்து விட்டான்' என்பது பக்தருக்குக் கிடைக்கக் கூடிய உட்பொருள். 'இனிமேல் சரணாகதனை எப்படியாவது காப்பாற்றித் தீரவேண்டியது பகவானின் தலைச்சுமை' என்பர்.

வாலிக்கோ, அந்தத் 'திக்கு நோக்கி'ய விழிப்பு, எதிரி சோர்ந்து போய்த் திகைத்துச் செயலின்றி விழிக்கும் விழிப்பே தான். தம்பியின் இந்தப் பரிதாப நிலையும் அன்பையோ, இரக்கத்தையோ சிறிதும் தூண்டவில்லை. அதற்கு மாறாகக் கோபா வேசத்தையும் கொலை வெறியையும் தான் தூண்டுகிறது.



அம்பு போடும் தடையுத்தரவு

இனி, அன்பு போடாத தடை யுத்தரவை அம்பு போடுகிறது! எப்படியென்று பார்ப்போம். 'இப்படியே எடுத்துத் தூக்கித் தரையில் மோதியடித்து முடித்து விடுவதற்கு இது ஏற்ற சமயம்' என்று கருதிய வாலி, இடுப்பில் ஒரு கையும் கழுத்தில் ஒரு கையுமாகப் பிடித்துத் தூக்கிவிட்டான். அப்போதே 'இதுதான் ஏற்ற சமயம் வாலி வதத்திற்கு' என்று ராமனும் தீர்மானித்து விட்டான்.

சுக்கிரீவனை வாலி தன் தலைக்கு மேலாகத் தூக்கியதும், மறைப்பில்லாமல் திறந்த மார்பு இலக்காகி விடுகிறது:

'எடுத்துப் பாரிடை எற்றுவாம் பற்றி' என்(று), இளவல்
கடித்தலத்தினும் கழுத்தினும் தன்இரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல், கோல்ஒன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோள் இழுத்(து) இராகவன் துரந்தான்.

[பாரிடை — பூமியில். எற்றுவாம் - மோதுவோம். பற்றி - பிடித்து. இளவல் - தம்பி. கடித்தலத்தினும் - இடையிலும். மடுத்து - செலுத்தி. மீக்கொண்ட — மேலே தூக்கிக்கொண்ட. கோல் — (இங்கே) அம்பு. வாங்கி — எடுத்து. நாணொடு தோள் இழுத்து - வில் நாணியுடன் கையையும் இழுத்து. துரந்தான் - செலுத்தினான்.]

கோதண்டத்தில் பாணத்தைப் பூட்டி நாணியைத் தோளளவும் இழுத்தது தான் கவிஞனும் காண்பது. பாணம் விடுபட்டுக் கிளம்பி வந்தது கவிஞன் - கண்ணுக்கும் புலனாகவில்லை.

காரும் வார்சுவைக் கதலியின்
 கனியினைக் கழியச்
சேரும் ஊசியிற் சென்றது!



[காரும் வார்சுவைக் கதலியின் கனி— முதிர்ந்த மிக்க சுவையுடைய வாழைப் பழம். கழியச் சேரும் — தைத்துச் செல்லும். ஊசியின் - ஊசிபோல.]

'வாழைப் பழத்தில் ஊசி இறங்குவது போலே' என்று சொல்லுகிறோமல்லவா?—அவ்வளவு எளிதாகத் துளைத்துக் கொண்டு நுழைகிறதாம் ராமபாணம் வாலி மார்பிலே.

அதே சமயம்தான், வலிமையழிந்து சோர்ந்து கிடந்த சுக்கிரீவனைத் தரையில் மோதப் போகிறான். ஆனால், அந்த நோக்கம் நிறைவேறுவதற்குள் நிலை கலங்கி மலை விழுவதுபோல் விழுந்து விடுகிறான்:

அலங்கு தோள்வலி அழிந்தனன்
 தம்பியை அருளான்,
வலங்கொள் பாரிடை எற்றுவான்
 உற்றபோர் வாலி,
கலங்கி,வல்விசைக் கால்கிளர்ந்(து)
 எறிவுறக் கடைக்கால்
விலங்கல் மேருவும் வேர்பறிந்-
 தாலென, விழ்ந்தான்.

[அலங்கு - விளங்குகிற. அழிந்தனன் தம்பி—அழிந்தவனும் தம்பியுமான சுக்கிரீவன். அருளான் - கொஞ்சமும் இரக்கப்படாதவனாய். வல்விசைக்கால் — வலிய விசையோடு கூடிய காற்று; பிரசண்ட மாருதம். வலம்கொள் பாரிடை - வலிமை கொண்ட நிலத்தில். எற்றுவான் உற்ற - மோதிக் கொல்லத் தொடங்கிய. போர் வாலி - போர் வெறி கொண்ட வாலி. கிளர்ந்து எறிவுற — கிளம்பி வீசுவதால்.

கடைக் கால் — கடைசிக் காலத்தில். விலங்கல் மேருவும் — மேரு மலையும். வேர் பறிந்தாலென — வேரோடு (அதாவது, அடியோடு) பெயர்ந்து விழுந்தாற்போல.]

இப்படி விழப்போகும் நிலையிலும், கூடுமானால் வாலி தம்பியைக் கொன்றிருப்பான். சுக்கிரீவன். இருந்த நிலையில் வேறு எந்த எதிரி இருந்தாலும் அப்போது அழித்து விடாமல் விட்டுவிடுவதே யுத்த தருமம். இந்த எதிரியோ வேறு யாருமில்லை, சொந்தத் தம்பி. வலியழிந்த நிலையில் தம்பி யென்றுவது இரக்கம் காட்ட வேண்டியது தமையன் கடமை. இந்தக் கடமையையும் மறந்து வாலி சுக்கிரீவ வதம் செய்யப் போகும் தருணத்திலேயே வாலி வதம் செய்ய வந்து விடுகிறது ராம பாணம்.

ராவணனையும் முதல் நாள் யுத்தத்திலே 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று அருளுடன் அனுப்பி வைக்கப் போகும் ராமன், தம்பிமாரையே உயிராகக் கொண்டவன். அத்தகைய ராமன், தம்பியைச் சிறிதும் இரக்கம் இல்லாமல் வாலி கொல்லப் போவதைக் கண்ணால் காணும்வரையில் அம்பு போடாது பொறுத்திருந்தான் என்றுகருதலாம். பிறகு வாலி செய்யப் போகும் சுக்கிரீவ வதத்திற்குத் தடையுத்தரவு போடுவது போல் அம்பு போடுகிறான்.



தம்பியை விட்டு அம்பைப்பிடித்தல்

சுக்கிரீவனைப் பிடித்திருக்கும் கைப்பிடி இப்போது தளர்ந்து நழுவுகிறது. ஆனால் அந்த முரட்டுக் கைகள், மார்பில் பாய்ந்து உருவப் போகும் அம்பைப் போகவொட்டாமல் உறுதியாகப் பற்றிக் கொள்கின்றன :

> சையம் வேரொடும் உரும்உறச்
> சாய்ந்தெனச் சாய்ந்தான்,
> வையம் மீதிடைக் கிடந்தபோர்
> அடுதிறல் வாலி,
> வெய்ய வன்தரு மதலையை
> மிடல்கொடு கவரும்
> கைநெகிழ்ந்தனன்; நெகிழ்ந்
> திலன் கடுங்கணை கவர்தல் ! [திலன்

[சையம் — மலை. உரும் உற — இடி விழ. சாய்ந்தென — சாய்ந்தாற்போல. சாய்ந்தான்—சாய்ந்து. வையம் மீதிடை — பூமியிலே. போர் அடுதிறல் வாலி — போரில் பகைவனை அடிக்கும் திறமையுள்ள வாலி. வெய்யவன் தரு மதலையை — சூரிய புத்திரனான சுக்கிரீவனை. மிடல் கொடு — வலிமை கொண்டு. கவரும் கை — (இங்கே) தூக்கியெடுத்த கைகள். கடுங்கணை கவர்தல் — உக்கிரமான ராமபாணத்தை அப்பால் போகவொட்டாமல் தன் கைகளால் பிடிக்கும் பிடியை. நெகிழ்ந்திலன் - நெகிழவிட்டானில்லை.]

விடுபட்ட சுக்கிரீவன் அப்பால் போய் நிற்கிறான். ராமபாணத்தைப் பிடித்து

வெளியே இழுத்துவிட முயலும் வாலியின் முயற்சியை அதிசயமாய்ப் பார்த்துக்கொண்டே நிற்கிறானென்று கருதலாம். நாம் இப்போது வாலியின் செயலை மட்டும் கவனிப்போம்:

வெற்றி வீரன(து) அடுகணை
அவன்மிடல் உரத்தூ(டு)
உற்ற(து): அப்புறத்(து)
[உருதமுன்,
உறுவலிக் கரத்தால்
பற்றி, வாலினும் காலினும்
பிணித்(து)அகப் படுத்தான்;
கொற்ற வெங்கொடு மறலியும்
சிரதலம் குலைந்தான்.

[அடுகணை — தவறாது பகையை அழிக்கவல்ல பாணம். மிடல் உரத்தூடு - வலிமையுள்ள மார்பில். உற்றது— சேர்ந்தது. உருத முன் — மார்பு முழுவதும் துளைத்து அப்பால் போய் விடுவதற்கு முன்பே. உறுவலிக் கரத்தால்— மிக்க வலிமையுள்ள தன் கைகளால். வாலினும் காலினும் பிணித்து — வாலால் கட்டியும் காலால் தடுத்தும். அகப்படுத்தான் — அகப்படுத்தினான், அப்பால் போகவொட்டாமல் செய்தான். கொற்ற வெங்கொடு மறலியும் — வெற்றியுள்ள பயங்கரனான கொடிய மரண தேவதையாகிய யமனும். சிரதலம் குலைந்தான் — தலையை அசைத்தான்; சிரக் கம்பம் செய்தான்.]

'ராம பாணத்தையே இப்படி அப்புறம் போகவொட்டாமல் தடுக்க முயல்கிறானே!' என்று இந்த வாலிக்காக வந்து காத்திருக்கும் மரணமும் இந்த அதிசயப் போராற்றலுக்குத் தலையசைத்து 'சபாஷ்' போடுகிறதாம்.

யமனுக்கும் அதிசயம்;
வாலிக்கும் அதிசயம்!

மரண தேவதைக்கும் அதிசயம் பொங்குகிறதாம். வாலிக்கோ ஒரே கோபாவேசம் வெள்ளமாய்ப் பொங்குகிறது, விண்ணுக்கும் மண்ணுக்குமாய்:

'எழுந்து வான்முக(டு) இடித்(து)
உகப்
படுப்பல்'என்று இவரும்;
'உழுந்து பேர்வுழித்திசைதிரிந்(து)
இறுப்பல்'என்று உறுக்கும்;
'விழுந்து பாரினை வேரொடும்
பறிப்பல்'என்று ஒரும்;
'அழுந்தும் இச்சரம் எய்தவன்
ஆர்கொல்?' என்(று)
அயிர்க்கும்.

[வான்முகடு இடித்து உக - வானத்தின் உச்சியை இடித்துச் சிந்தும்படி. படுப்பல் - செய்துவிடுவேன். என்று இவரும் - என்று எண்ணி மேலே எழுவான். உழுந்து பேர்வுழி - ஓர் உளுந்து நிலைபெயர்ந்து ஒரு தடவை உருளுமே அவ்வளவு அதிவிரைவில்; உளுந்து உருளும் காலத்தில். திசை திரிந்து - திசைகளில் திரிந்து. இறுப்பல்- அத்திசைகளையெல்லாம் அழித்து விடுவேன். உறுக்கும் — கொதித்துக் கோபிப்பான். பார் - பூமியை. பறிப்பல் - பறித்தெடுப்பேன். ஒரும் — ஆலோசிப்பான். அழுந்தும் - (என் மார்பில்) இன்னும் அழுந்திக்கொண்டிருக்கும். இச்சரம் - இந்த அம்பு. அயிர்க்கும் - சந்தேகிக்கும்.]

துள்ளித் துடிக்கும்போதே வாலியின் வீர உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் கோப வெறி இது!

'நான் இந்தக் கடுங்கணையை அப்புறம் போகவொட்டாமல் இப்படிப் பிடித்துக் கொண்ட பின்பும், மேன்மேலும் நெஞ்சில் அழுந்திய வண்ணமாயிருக்கிறதே! — இதை ஏவினவன் யாரோ? அவனையும் பார்த்து விடுவோம்' என்று கண்கள் கனல் சிதற எல்லாத் திசைகளிலும் பார்க்கிறான்.

* * *

சுக்கிரீவனைப் போல் ராமனும் அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று ஊகஞ் செய்யலாம்.

கொள்கிறனும். மன்மதன் மீதும் பூர்ண சந்திரன் மீதும் இவளுக்கு ஏற்படும் எர்ச்சல் தான் கொஞ்சமோ? அந்த எரிச்சலோடு, எரிபிடாரியின் உள்ளத்தையே பார்த்து விடுகிறோம், அறிவுப் புகைச்சலுக்கிடையே:

கலை உ வாமதி —
யேகறி யாக,வன்
சிலையின் மாரனைத்
தின்னும் நினைப்பினுள்.

[கலை உவாமதி—கலை நிரம்பிய பூர்ண சந்திரன். வன்சிலையின் மாரன் — கொடிய வில்லையுடைய மன்மதன்.]

தென்றலா, வேலா?

பூர்ண சந்திரனைக் கறியாக வைத்துக்கொண்டு மன்மதனை அப்படியே தின்றுவிட நினைக்கிறாளாம். ஆனல் அப்படியே ஓய்ந்து விழுகிறுள், தன் ராட்சஸ பலமெல்லாம் இழந்தவளாய். ஏன்? எப்படி?

மலைய மாருத
மாம்நெடுங் காலவேல்
உலைய மார்பிடை
ஊன்றிட,— ஒயுமால்!

[மலையமாருதம்—பொதிய மலையிலிருந்து வருகிற இளந் தென்றல். கால வேல்—கொடிய வேலாயுதம். உலைய—உலைந்து போகும்படி. ஓயும்—அப்படியே ஓய்ந்து போய்விட்டாள்.]

பூவும் காவும் சதிசெய்கின்றன

அந்தச் சோலையிலுள்ள பூங்கொடிகள் செடிகள் மரங்கள் மீதும் கோபம்தான். 'என்னை ஹிம்ஸிக்க வேண்டுமென்று தானே நீங்களெல்லாம் பூத்துக் கொழிக்கிறீர்கள்!' என்ற கோபத்திலே, தான் ஒளிந்து கொண்டிருக்கும் அந்தச் சோலையை மட்டுமல்ல, பூமியிலுள்ள சோலைகளையெல்லாம் ஒடித்துப் பொடித்துக் கசக்கித் தூள் தூளாக்கி விடுவதாகத் தீர்மானிக்கிறுள்:

'பூவெ லாம்பொடி
யாக,இப் பூமியுள்
காவெ லாம்ஒடிப்-
பென்!எனக் காந்துவாள்.

[கா — சோலைகள். காந்துவாள் — கோபதாபம் கொள்வாள்.]

எனினும் ஆண் அன்றிலோடு வாழும் பெண் அன்றில் மெல்லக் கூவுவதையும் பொறுக்கமுடியாமல் உடல் நடுங்குகிறதாம்.

உறைபனியும் சீதம் இழந்தது

காமவெப்பத்தைத் தாங்கமுடியாமல் சூர்ப்பணகை உறைபனியை அள்ளி அப்பிக்கொள்கிறாளாம். (உறைபனி எப்படிக் கிடைத்ததோ தென் இந்தியாவில்? கவிஞனுக்கு இமயம் தெரியுமென்று சமாதானம் சொல்கிறார் ஒரு ரஸிகர்.) வெண்ணெய்போல் மிருதுவாய்க் குழைந்த குளிர்ந்த அந்த உறைபனியை அள்ளி அள்ளி அப்பிக்கொண்டும், இவளுக்குக் கொஞ்

சமாவது குளிர்ச்சி ஏற்பட வில்லையாம். வெந்த பாறையில் வெண்ணெய் போல் உருகிப் போகிறதாம் உறைபனி :

ஐய தண்பனி
அள்ளினள் அப்பினள் ; —
மொய்கொள் தீயிடை
வெந்துமு ருங்கிய
வெய்ய பாறையில்
வெண்ணெய்நி கர்க்குமால் !

[ஐய தண்பனி – மிருதுவான குளிர்ந்த பனி. மொய்கொள் தீயிடை— நெருக்கமாக விறகிட்டு எரிக்கும் தீயில். முருங்கிய – நிலை மாறிய. வெய்ய – வெப்பம் ஏறிய. நிகர்க்கும் – ஒத்திருக்கும்.]

'இத்தகைய மோகத்திற்கு ஒரு முடிவும் உண்டோ?' என்று பெருமூச்சுவிட்டுக் கவிஞனும் கொஞ்சம் ஒய்ந்துதான் போகிறான்.

காதலும் மோகமும்

சீதையின் காதலையும் வருணித்திருக்கிறான் கவிஞன். அந்தக் காதலின் வேகத்தையும் வருணித்திருக்கிறான். பாலில் இட்ட மோர்ப் பிரை போல் சீதையின் உள்ளமெங்கும், அமைதியாகப் பரவியதாம் கண்வழி புகுந்த காதல். சூர்ப்பணகையின் காமக்கனலோ கொடிய நாகத்தின் விஷம் ஏறுவது போல் ஏறுகிறது. அந்தக் காதலைப் பரிவுடன் வருணித்த வாக்கு இந்தக் காதலுள்ளத்தை ஒருவகைப் பரிகாச உணர்ச்சியுடன் வெளியிடுகிறதல்லவா ?

எரிகிற நெருப்பில் விறகு விழுந்தது போல் இருந்ததாம், சீதை மீது விழுந்த மன்மத பாணம். சூர்ப்பணகைமீது பாயும் மன்மத பாணமோ, தாடகைக் கொடியாள் மீது ராமபாணம் பாய்ந்தது போல் இருக்கிறதாம்.

சீதையும் சந்திரனைக் கண்டு கொதித்துப் பேசுகிறாள். 'குளிர்ச்சியான கடலில் தோன்றிய சந்திரனே ! நீ கொடியவன் இல்லை ; கொலைகாரன் இல்லை. மரணத்தைப் போக்கும் இனிய அமிர்தத்தோடும், பெண்ணோடும் (மகாலட்சுமியோடும்) பிறந்திருக்கிறாய். அப்படிப்பட்ட நீ என்னைச் சுடத்தான் செய்வாயோ ?' என்று கேட்கிறாள். சூர்ப்பணகையோ சந்திரனைத் தின்றுவிடுவதாகக் குதிக்கிறாள், பயமுறுத்துகிறாள்.

ஆசை நோய்க்கு
மருந்தும்உண் டாம்கொலோ ?

என்று சீதையின் விரக தாபத்தைக் குறித்து வினவிய கவிஞன் சூர்ப்பணகையின் விரக தாபம் குறித்து,

மோகந் துக்கொர்
முடிவும்உண் டாம்கொலோ?

என்று கேட்கிறான்.

அரக்கியின் காதலைக் கம்பன் மோகம் என்று வேறுபடுத்திக் காட்டுவதாய் ஊகிக்கலாம். 'காதல் என்பது தான் விரும்பிய ஒரு பொருளுக்குத் தன்னை அளிக்கவேண்டும் என்னும் ஊக்கம்' என்றும், 'மோகம் என்பது பிறரைத் தான் அடையவேண்டும் என்னும் முயற்சி' என்றும் ஒரு தமிழறிஞர் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு காட்டி, சீதையின் தூய காதலோடு சூர்ப்பணகையின் மோகத்திற்குள்ள முரண்பாட்டை நுணுக்கமாய் நோக்கி விளக்கியுள்ளார்.

சித்திர ராமாயணம்



333. வாலி கண்ட மகாமந்திரம்

'இந்த அம்பைத் தொடுத்தவன் யாரோ?' என்று சந்தேகித்த வாலியால், 'இது ஒரு மனிதன் செயல்' என்றே நினைக்க முடியவில்லையாம்.

தேவரோ, மூவரோ ?

'தேவர்களோ?' என்ற சந்தேகம் ஒரு கணம். அடுத்த கணமே 'இது தேவர் செயல் அன்று' என்ற தீர்மானம். ஏன்? தேவராஜகுமாரன் தானே இந்த வாலி,—இந்திர புத்திரன் அல்லவா?

மேலும், இது தொந்த யுத்தம் - இருவர் போர். இருவரும் தேவ புத்திரர். இப் போரில் தேவர்கள் குறுக்கிடுவானேன்?

அவர்களே குறுக்கிட்டாலும் பலிக்குமா வாலியிடம்? இந்த மார்பைத் துளைக்கும் அம்பு அவர்களிடம் இருக்க முடியுமா? அத்தகைய அம்பே கிடைத்திருந்த போதிலும் அதை இப்படிச் செலுத்தும் ஆற்றல் தான் அந்தச் சூட்சும சரீரிகளுக்கு உண்டோ?

தேவர்கள் செய்யவில்லையென்றால் வேறு யார் செய்யத் துணிந்த செயல் இது? வாலிக்குச் சிரிப்பு வருகிறது, அவ்வளவு உடல்-வேதனையிலும் !


தேவர் கிடக்கட்டும்; மூவரில் ஒரு மூர்த்தி தான் இவ்வளவு திறமையுடன் இச் செயல் செய்ய முடியுமா? இப்படியெல்லாம் எண்ணங்கள், ஐயங்கள் உருண்டோடுகின்றன வாலியுள்ளத்திலே :

'தேவரோ ?'என அயிர்க்கும்;'அத்
தேவர் இச் செயலுக்(கு)
ஆவரோ? அவர்க்(கு) ஆற்றல் உண்-
டோ?'எனும்; 'அயலோர்
யாவரோ ?'என நகைசெயும் ;
'ஒருவனே இறைவர்
மூவரோடும்ஒப் பான்செய-
லாம்'என மொழியும்.

[அயிர்க்கும் - சந்தேகிப்பான். அயலோர் யாவரோ - வேறு யாரோ. நகைசெயும் - சிரிப்பான். இறைவர் மூவர் - திரிமூர்த்திகள். மொழியும் — மொழிவான்.]

ஒரு சமரஸக் கருத்து

தேவருமில்லை; மூவருமில்லை. வேறு யாவரோ? 'அந்த ஒருவன் மூவருக்கும் ஒப்பானவன்!' என்றும் வாலி ஊகிக்கிறான். இப்படிக் கூறுவதில்,



கம்பனுடைய ராமாவதாரக் கொள்கையின் ஒரு பகுதி வெளிப்படுகிறது.

ராமனுக்கு மும்மூர்த்திகளில் ஒருவரும் தனியே ஒப்பாகமாட்டார் என்பதும், விஷ்ணுவும் ஒப்பாகமாட்டார் என்பதும், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவரும் ஒருவனுய்ப் பிறந்த பிறப்பே ராமாவதாரம் என்பதும் கம்பனின் சமரஸ உட்கருத்து. இது வேறு இடங்களிலும் வெளிப்படக் காணலாம்.

'அம்பு தானு?' என்றும் ஐயம்

தன் மார்பை இப்படித் துளைப்பது அம்பு தானு? மகாவிஷ்ணுவின் சக்கராயுதம் தானே? இல்லாவிட்டால், நீலகண்டமூர்த்தியின் நீண்ட சூலாயுதமோ? அல்லது முருகக் கடவுளின் வேலாயுதம் தானே?

இப்படியெல்லாம் சந்தேகிக்கும் வாலி, தன் தெய்வத் தந்தையான இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கும் தன் வஜ்ர தேகத்தைத் துளைக்கும் வலிமை கிடையாதே என்றும் தனக்குத் தானே சொல்லிக்கொள்கிறான். சொல்லிக் கொண்டே மனம் புழுங்குகிறான்:

'நேமி தான்கொலோ? நீலகண்—
டன்நெடுஞ் சூலம்
ஆம்இ(து), ஆங்கொலோ?
அன்றெனில்
குன்(று) உரு(வு) அயிலோ?
நாம இந்திரன் வச்சிரப்
படையும்என் நடுவண்
போம்எ னும்துணை போதுமோ?
யாதெ'னப் புழுங்கும்.

[நேமிதான் கொலோ - சக்கராயுதமே ஆகுமோ. நீலகண்டன் - சிவபெருமான். சூலம் ஆம் இது - சூலமாகிய இது. ஆம்கொலோ — ஆகுமோ. அன்று எனில் - அவையல்ல என்றால். குன்று உருவு அயிலோ - மலையை ஊடுருவித் துளைத்த வேலாயுதமோ. நாம இந்திரன் - பிரசித்தமான தேவேந்திரன். வச்சிரப் படை - வச்சிராயுதம். நடுவண் - நடு இடத்தில்; மார்பில். போம் எனும் துணை போதுமோ - நுழைந்து போகும் என்று சொல்லத் தக்க வலிமை வாய்ந்ததோ. யாது என — வேறு யாது என்று சந்தேகித்து. புழுங்கும் - மனம் கொதித்தான்.]

மறுபடியும் 'அம்புதான்' என்ற எண்ணமும் வருகிறது. ஆனல் இந்தக் கொடிய அம்பினை எந்த வில்லைக் கொண்டு எப்படிச் செலுத்தியிருக்க முடியும்? வில்லினுல் செலுத்தப்பட்டதுதானு? வில்லம்பா, அல்லது சொல்லம்பா? 'நிறைமொழி மாந்தர்' என்கிறர்களே அந்த மகரிஷிகள் (நெடுமுனிவர்) 'நீளநினைந்து' நெஞ்சிலிருந்து நெஞ்சுக்குச் செலுத்திய சொல்லம்பு தானே?

'வில்லி னுல்துரப்(பு) அரி(து)
[இவ்வெஞ்
சரம்!'என வியக்கும்;
'சொல்லி னுல்நெடு முனிவரோ
தூண்டினுர்?' என்னும்.

[வில்லினுல் துரப்பு - வில்லினுல் செலுத்துவதற்கு. அரிது - அருமையானது. வியக்கும் — வியப்படைவான். நெடுமுனிவர் - மகரிஷிகள். என்னும் - என்று நினைப்பான்.]

அம்பு தான் என்று இப்போது நிச்சயமாகி விடுகிறதாம்:

சரம்எ னும்படி தெரிந்தது:
பலபடச் சலித்(து)என்?

[சரம் - அம்பு. எனும்படி - என்கின்ற நிலைமை. தெரிந்தது - இப்போது தான் நிச்சயமாகத் தெரிந்தது. பலபட - பலவாருக. சலித்து — மனம் சலித்து. என் — என்ன பயன்.]

அந்தப் பரம யோக்கியன் யார்?

இனி, இந்த அம்பைக் கை, கால், வால் ஆகிய மூன்று உறப்புகளின் முழு ஆற்றலும் கொண்டு பறித்துப் பார்க்க வேண்டியதுதான். ஆனல், அம்பு மார்பை எப்படித் துளைத்துச் சென்றிருக்கிறது? வாலி எப்படிப் பறித்தெடுக்க முயல்கிறான்?





'உரம்எ னும்பதம் உயிரோடும்
உருவிய ஒன்றைக்
கரம்இ ரண்டினும் வாலினும்
காலினும் கழற்றிப்
பரமன் இன்னவன் பெயர்அறி-
குவென்'எனப் பறிப்பான்!

[உரம் எனும் பதம் — மார்பு என்னும் இடத்தை. ஒன்றை - ஒப்பற்ற அம்பை. பரமன் இன்னவன் பெயர் அறிகுவென் — இந்த அம்பைத் தொடுத்த பரம யோக்கியனுடைய பெயரைத் தெரிந்துகொள்வேன்.]

'எப்படியாவது இந்த அம்பை என் மார்பிலே செலுத்திய பரம யோக்கியனை நான் தெரிந்து கொள்வேன்!' என்று வாலி வெகு இகழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டே, அந்த அம்பை மார்பிலிருந்து பறித்தெடுக்கப் பார்க்கிறான்.

அம்புகளில் பிரயோகிப்பவன் பெயரைப் பொறித்திருப்பது வழக்கம். ஆகவே, 'அம்பை நோவதில் பயனில்லை; எய்தவனைக் கண்டு பிடிப்போம்' என்ற ஸங்கல்பத்துடன் அம்பைப் பறிக்கிறான் வாலி.

வியப்பும், சோகமும்

அதை கண்ட தேவரும் பிறரும் அந்த ஆற்றலையும் மனோசக்தியையும் அதிசயமாய்ப் பார்க்கிறார்களாம்:

விங்கினூர்கள்தோள் ; வீரரை
யார்விய வாதார் ?

[வீங்கினூர்கள் - பூரித்தார்கள். விய வாதார் — அதிசயமாய்க் கொண்டாடா தவர்.]

வீரனை வியந்தார்கள் தேவரும் பிறரும். ராம லட்சுமணரும் வாலியின் அற்புத வீரத்தை வியந்திருப்பர் என்பதில் ஐயம் இல்லை. வாலி மேனியின் வீரப் பொலிவே ராமனை வியப்படையச் செய்து விட்டதே !

சரி ; வாலியின் 'எமகண்ட'ப் பிடியிலிருந்து நழுவித் தப்பி, 'செத்தேனா, பிழைத்தேனா ?' என்று ஒதுங்கி நின்று பார்க்கும் சுக்கிரீவனின் நிலை என்ன ? அவனால்தான் வியவாது நின்று கொண்டிருக்க முடிந்ததா ?

சுக்கிரீவனால் அண்ணனின் அந்த ஒப்பற்ற வீரத்தை வியக்கவும் முடியவில்லை; ஏன், நிற்கவும் முடியவில்லையாம் :

வாசத் தாரவன் மார்பெனும்
மலைவழங்(கு) அருவி
ஓசைச் சோரியை நோக்கினன்,
உடன்பிறப் பென்னும்
பாசத் தால்பிணிப் புண்டஅத்
தம்பியும், பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர,
நெடுநிலம் சேர்ந்தான்.

[வாசத் தாரவன் — வாசனையுடைய மாலை தரித்தவன்; (இங்கே) போருக்கு அறிகுறியான தும்பைப் பூமாலை சூடி வந்த வாலி. மார்பெனும் மலை — மலை போன்ற மார்பு. வழங்கு அருவி ஓசைச் சோரியை - ஓசையோடு பெருகிய இரத்தப் பெருக்கை. நோக்கினன்— நோக்கி. உடன் பிறப்பு என்னும் பாசத்தால் பிணிப்புண்ட - சகோதர பாசத்தால் கட்டப்பெற்ற. பசுங்கண் - பசுமையான தன் கண்களிலிருந்து. நேசத் தாரைகள் - அன்பே உருகிப் பெருகுவது போன்ற கண்ணீர்த் தாரைகள். சொரிதர — சொரிய.]

வாலியின் வீரத்தைத் தோள் பூரித்து வியப்பதுபோல், இந்தச் சகோதர பாசத்தையும் உள்ளம் பூரித்து வியக்க வேண்டியதுதான். வாலி சுக்கிரீவப் போராட்டம் என்ற பயங்கர வசீகரம் வாய்ந்த காட்டிலே ஒரு பசுஞ் சோலை இது.

'மருந்தா, மந்திரமா ?'

வாலியோ அம்பிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறான். பதித்த அம்பில் பொறித்துள்ள பெயரைப் பார்க்கத் துடித்தானே, அந்தப் போராவலையும் மறந்து, அந்த அம்பை அப்படியே துண்டு துண்டாக ஒடித்தெறியப் பார்க்கிறான்.

முயன்றும் முடியவில்லை. 'அந்தப் பொல்லாத பெயரையாவது தெரிந்து கொள்வோம்' என்று கவனிக்கிறான்:

மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத், தானே
இம்மையே எழுமை நோய்க்கு
மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்.

[மும்மைசால் உலகுக்கெல்லாம் - மூன்று உலகங்களுக்கும். முற்றும் - முழுவதும். தமர் - தம்மவர் ; தம்மைச் சார்ந்தவர்கள். நல்கும் - கொடுக்கிற. தனிப்பெரும் பதத்தை-ஒப்பற்ற பெருஞ் சொல்லை. தானே — தனியாகவே. இம்மையே - இம்மையிலேயே ; இந்தப் பிறவியிலேயே. எழுமை நோய்க்கு - எழுவகைப் பிறப்புக்களின் நோய்களுக்கும். தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, மிருகம், மனிதர், தேவர் என்பன எழுவகைப் பிறப்புகள்.]

ராம நாமம் மந்திரமும் கூட ; மருந்தும் கூட. மூலமந்திரம், மகா மந்திரம். எல்லா நோய்களுக்கும் ஒரு மருந்து.

மந்திரங்களை வேத ரிஷிகள் கண்டனர் உபாசனையாலும் தவத்தாலும். நேசத்தால், பாசத்தால் பக்தர் கண்டனர். பகைமையால் கண்டு கொள்கிறான் வாலி !

முந்தியபாட்டு ஒரு பசுஞ்சோலையென்றால், இது அக்காட்டிலே ஒரு கோயில்.

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

334. வில்லுடன் நழுவிய நீலமேகம்

மூலமந்திரத்தை வாலி கண்டும் உடனே பக்தி பரவசனுகி விடவில்லை. தன் உடல் நோய்க்காவது மன நோய்க்காவது மருந்தும் அதனுல் கிடைத்து விடவில்லை.

ஆஹா, என்ன தியாகம்!

அம்பு எய்தவன் ராமனே என்று தெரிந்தும் வாலி இகழத்தான் செய்கிறுன். சாதாரண இகழ்ச்சியா?

'இல்லறம் துறந்த நம்பி,
எங்களுக் காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன்
தோன்றலால், வேத நூலில்
சொல்லறம் துறந்தி லாத
சூரியன் மரபும் தொல்லை
நல்லறம் துறந்த(து)!' என்னு,
நகைவர, நாண் உட் கொண்
டான்.

[இல்லறம் துறந்த நம்பி—மனைவியுடன் வீட்டிலிருந்து அறஞ் செய்து வாழும் வாழ்வைத் துறந்து வனம் புகுந்தவன். நம்பி — புருஷோத்தமன்; ஆடவரில் சிறந்தவன்; (இங்கே) இகழ்ச்சிக் குறிப்பு. வில்லறம் — வில் யுத்தத்திற்கு உரிய தர்மம். தங்கள் வில்லறம் — க்ஷத்திரிய குல தருமமாகிய வில்லறம். வேதநூலில் சொல் அறம்— வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட தருமங்கள். துறந்திலாத - விடாமல் பரம்பரை பரம்பரையாக அனுஷ்டித்து வந்த. சூரியன் மரபும் - சூரிய குலம் என்ற உயர்ந்த க்ஷத்திரிய குலமும். தொல்லை நல்லறம் - தொன்று தொட்டு வருகின்ற நல்ல தருமம். என்னு - என்று சொல்லி. நகை — (இங்கே) இகழ்ச்சிச் சிரிப்பு. நாண் — நாணம். உட்கொண்டான் — உள்ளத்திலே கொண்டான்.]

'இல்லறம் துறந்த நம்பி' என்று குறிப்பிடுவதில், இல்லாளுடன் தவவேடம் பூண்டு வனவாசம் செய்தது மட்டுமா குறிக்கப் படுகிறது? 'அந்த வனவாசத்திலும் வாழ்க்கைத் துணைவியை அரக்கன் கவர்ந்து செல்லத் துறந்தவனுய், பழிக்குப் பழி வாங்கத் திறனும் இல்லாதவனுய், ஏதோ ஒரு பெருந்தியாகம் செய்து விட்டது போல் பலவீனத்தையே துறவாகக் கருதி விநக்கிறுன் இந்தப் புருஷோத்தமன்!' என்ற இகழ்ச்சிக் குறிப்பும் வாலி கூற்றில் புதைந்து கிடக்கிறது.



'இவ்வளவு அழகாய் இல்லறம் துறந்த நம்பி, இப்போது வில்லறம் துறந்து விட்

டான் — தியாகத்திற்கு மேல் தியாகம்!' என்கிறான்.

'எனக்கும் என் தம்பிக்குமாக' என்பதைத்தான் 'எங்களுக்காக' என்கிறான். தம்பிக்கு அனுகூலமாகவும், தனக்குப் பிரதிகூலமாகவும் தொந்த யுத்தத்திலே தலையிட்டதால் வில்லறமும் க்ஷத்திரிய தருமமும் துறந்துவிட்டானும். இல்லறம் துறந்தவனை 'நம்பி' என்றதுபோல, வில்லறம் துறந்தவனை 'வீரன்' என்று பரிகசிக்கிறான்.

இவ்வளவுதானா ராமனுடைய துறவும் தியாகமும்? தான் பிறந்த சிறந்த குலத்தையும், தியாகஞ் செய்யுமாறு செய்து விட்டானும் — எதை? பரம்பரை பரம்பரையாக அனுஷ்டானத்தில் இருந்து வந்த நல்லறத்தைத்தான்! ராமன் காடு துறந்து காடு புகுந்து வாழ்க்கையை இப்படி ஒரே துறவு மயமாய்த் தியாக சமுத்திரமாய்ச் செய்துகொண்டானும்.

ஆஹா, என்ன பெருந்தகைமை!

'உலகத்தை (அதாவது, நீ பிறந்த உலகத்தின் மூலையை) எந்த நிலையில் காண்கின்றாயோ, அதைக் காட்டிலும் கொஞ்சமாவது மேலான நன்னிலையில் விட்டுப் பிரிவாயாக' என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. அந்த மேற்குத் திசை - மெய்யறிவு கிழக்குத் திசைக்கும் உடன்பாடுதான். ஒரு வீரன் தோன்றலால் நல்லறம் முன்னிலும் அதிகமாய் ஒளிர வேண்டும் என்பர். இப்படியானல்தான் வீரம் வீரமாகிறது, வீரன் வீரனுகிறான். ஆனல் ராமனின் தோற்றத்தால் சூரியகுலத்தின் நல்லறமும் அஸ்தமனமாகி விட்டதே!—சிரிக்கிறான் வாலி.

வெட்கம் இல்லாமல் ராமன் இந்தப் பழியைச் சம்பாதித்துக் கொண்டானும். அதற்காக வாலிதான் வெட்கப்பட வேண்டியிருக்கிறது! அநியாயமாக, தர்ம விரோதமாகத் தன்மேல் அம்பு போட்ட ராமனுக்கு அதனல் வந்து சேரும் பழியையும் தனக்கு வந்ததாகவே கருதி வெட்கப்படுகிறானும் வாலி. ஆஹா, என்ன பெருந்தகைமை!

படுகுழியில் யானை

மகுடம் சூடிய இந்தத் தலை — வணங்கா முடியாக நிமிர்ந்து நிற்கும் தலை —இப்போது நாணத்தால் சாய்ந்துவிடுகிறது! நாணம் அதிகரிப்பதுபோல் சிரிப்பும் அதிகரிக்கிறது:

வெள்கிட மகுடம் சாய்க்கும்;
  வெடிபடச் சிரிக்கும்; மீட்டும்
உள்கிடும்; 'இதுவும் தான்ஓர்
  ஓங்கறமோ?' என்(று)
                    உன்னும்;
முள்கிடும் குழியில் புக்க
  மூரிவெங் களிநல் யானை
தொள்கொடும் கிடந்த தென்னத்
  துயர்உழந்(து) அழிந்து
                    சோர்வான்.

[வெள்கிட — வெட்கம் வந்ததால். மகுடம் சாய்க்கும் — கிரீடம் சூடும் கம்பீரமான தலையைச் சாய்ப்பான். வெடிபடச் சிரிக்கும்—வெடி போடுவதுபோல் ஆர்ப்பாட்டமாகச் சிரிப்பான். மீட்டும் உள்கிடும் — மீளவும் ஆலோசிப்பான். ஓங்கு அறமோ — ஓங்குகின்ற தர்மமோ. உன்னும் — நினைப்பான். முள்கிடும் குழி — முழுகி அழுந்தச் செய்யும் வஞ்சப் படுகுழி அல்லது பெரும் பள்ளம். புக்க — (இங்கே) விழுந்து விட்ட. மூரி — வலிமையுள்ள. வெங்களிநல் யானை — கொடிய மதங்கொண்ட உத்தம லட்சணம் வாய்ந்த யானை. தொள்கொடும் — (இங்கே) கால் விலங்கோடும். துயர் உழந்து—துயரத்திலே வருந்தி. அழிந்து சோர்வான் — நிலைகுலைந்து தளரும் வாலி.]

யானைக் காட்டில் படுகுழி பறித்து அதிலே யானையை விழச் செய்து விலங்கு மாட்டி விடுகிறார்களே யானை பிடிப்பவர்கள், அந்த மாதிரி ஒரு தந்திரத்தால் ராமன் தன்னையும் படுகுழியில் தள்ளிவிட்டானே! — என்று துயருற்றுச் சோர்ந்து புலம்புகிறது வாலியுள்ளம் இப்போது.



அப்போதும், இப்போதும்

தாரையிடம் வாலி ராமனைக் குறித்து அப்போது வெளியிட்ட அபிப்பிராயத்தை நாம் ஞாபகப்படுத்திக் கொண்டால் தான், இப்போதுள்ள வாலியின் மன நிலையை நன்கு அறிந்து கொள்ளலாம்.

தர்ம மார்க்கத்தையெல்லாம் அனுஷ்டித்துக் காட்டும் புருஷோத்தமன் என்றான். இப்போதோ 'அறம் துறந்த நம்பி' என்று நகைக்கிறான்.

அப்பேர்ப்பட்ட தர்மமூர்த்தி தனக்குப் பிரதிகூலமாவான் என்பதைக் கொஞ்சமும் நம்ப முடியாமல் அப்படிச் செய்தி சொன்ன மனைவிக்குப் 'பாவி' என்றும் ஒரு பட்டம் கட்டினான்.

ராமன் தருமம் தவறுவதென்றால் 'தருமமே தற்கொலை செய்து கொள்வதுதான்!' என்றான்:

தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தானரோ?

'சகோதர பாசத்தை உயிராகக் கொண்ட ராமன்—தம்பிமாரையே தன் இன்னுயிராகக் கொண்டவன்—என் தம்பி சுக்கிரீவனும் என்னிடம் அப்படித் தெய்வ விசுவாசம் கொள்ள வேண்டும் என்று தானே எதிர்பார்த்திருப்பான்? அண்ணனுன என்மீது அம்பு போடுவானு? அருளின் மகா சமுத்திரமல்லவா?' என்றெல்லாம் பிரசங்கித்துத் தாரை வாயை மூடி விட்டான்.

அதே காரணம் போதுமே தம்பி மேல் கருணை காட்டித் தன்னைத் தண்டிப்பதற்கு—என்பதை நினைத்துப் பார்க்கவும் இல்லை. ஒரே வழியில் வண்டி போகும் வீதிதான் வாலியின் மன வீதியும், தர்க்க ரீதியும்!

இப்போதோ, 'அப்படி யெல்லாம் சொன்னேனே இந்த ராமனைக் குறித்து என் மனைவியிடம்; அவளைப் பாவியென்றும் பேதை யென்றும் தூஷித்தேனே! நானல்லவா பேதை?' என்றெல்லாம் எண்ண எண்ண, நாணத்தை அடக்க முடியுமா? நகைப்பைத் தான் அடக்கிக் கொள்ள முடியுமா?

கடைசியாக, வாலி தான் சிரித்த வெடிச் சிரிப்பையும் அடக்கிக்கொண்டு, 'என்ன ஆச்சரியம்! நல்ல ராமபிரான்! நீதி தவறிய நிர்மல மூர்த்தி! குற்றம் செய்து செய்து பரம்பரையாகத் தாழ்ந்து போனவர்களின் இழிந்த இயற்கைதானு இந்த ராமனின் இயல்பும்? நானல்லவா உரைகல் ஆனேன், "இந்தப் பொன்னில் மாற்றில்லை, இது காக்காய்ப் பொன்!" என்று காட்ட!' என்று உரக்கச் சொல்லி விடுகிருன்.

இந்திரஜாலக் கவிதை

இந்த வார்த்தை—இந்தக் குற்ற வெளியீடு—காதில் விழுந்ததும் ராமன் வெளிப்பட்டு வருகிருன்; வாலி கண் எதிரே:

'இறைதிறம் பினனுல்; என்னே!
இழிந்துளோர் இயற்கை!
என்னில்
முறைதிறம் பினனுல்!' என்று
மொழிகின்ற முகத்தான்முன்னர்,
மறைதிறம் பாத வாய்மை—
மன்னர்க்கு முன்னம் சொல்லும்
துறைதிறம் பாமல் காக்கத்
தோன்றினன், வந்து தோன்ற—

[இறை—ராமபிரான்; இகழ்ச்சிக் குறிப்பு. திறம்பினனுல்—தவறி விட்டான். என்னே—என்ன ஆச்சரியம்? இழிந்துளோர் இயற்கை—குற்றஞ் செய்து செய்து இழிந்து போனவர்களின் சுபாவம் இது. என்னில் முறை திறம்பினனுல்—என் விஷயமாக நீதி முறை தவறிவிட்டான். மறை திறம்பாத—வேதக் கருத்துடன் மாறுபடாத. வாய்மை மன்னர்க்கு—சத்திய வழியில் நடக்க விரும்பும் அரசர்களுக்கு. முன்னம் சொல்லும் துறை—பழமையாகச் சொல்லி யிருக்கும் அறத் துறை.]

'ராஜதர்மம் தவறிவிட்டான், நீதி தர்மம் திறம்பி விட்டான்' என்றெல்லாம் குற்றப் பத்திரிகை படிக்கும் வாலியின் முகத்திற்கு முன்னே வருகிருன் ராமன், 'என் முகத்தைப் பாரப்பா; குற்றவாளி முகம்தானு? நேரே பார்!' என்று சொல்லாமல் சொல்வது போல.

இப்படி வந்தவனை 'ராஜநீதி தவருத ராமன்; அரசர்களுக்கு முன்மாதிரியான ராமன்; ராஜ தர்மத்தைக் காக்கப் பிறந்த ராமன்' என்றெல்லாம் வாயார வாழ்த்துகிறது கவியுள்ளம்.

கவிஞனை வாலியாகப் பிரிந்து நின்றும்,விரைவில் வேடங் கலந்து தானுகத் தனித்துநின்றும் நோக்கிய நோக்கு, எத்தகைய முரண்பாடுகளுடன், இச் செய்யுளில் பிரதிபலிக்கிறது பாருங்கள்!

மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு, வாலி - சுக்கிரீவர் போரிட்ட சம வெளிக்கு இறங்கி வருகிருன் ராமன். 'மேட்டிலிருந்தா வருகிருன்? விண்ணிலிருந்து மண்ணில் நழுவி ஒரு நீலக்

கார்மேகம் வான வில்லுடன் அப்படியே வந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறதாம். வாலிக்கா, கவிஞனுக்கா?

கண்ணுற்றான் வாலி நீலக்
கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி
வருவதே போலும் மாலை;
புண்ணுற்ற தனைய சோரிப்
பொறியொடும் பொடிப்பநோக்கி,
'எண்ணுற்றாய் என்செய்
தாய்?' என்(று)
ஏசுவான் இயம்ப லுற்றான்.

[முகில் — மேகம். கமலம் பூத்து—தாமரை மலர்கள் மலரப்பெற்று. வரிவில் — கட்டமைந்த வில். மால்—திருமாலின் அவதார மூர்த்தியான ராமன். புண் உற்றது அனைய சோரி—புண்ணிலிருந்து வெளிப்படுவது போன்ற இரத்தம். பொறியொடும் — கண்ணில் தீப்பொறிகளோடும். பொடிப்ப—புறப்பட. எண்ணுற்றாய் என் செய்தாய்-என்ன எண்ணி என்ன செய்துவிட்டாய். இயம்ப லுற்றான் — சொல்லத் தொடங்கினான்.]

இந்த இரண்டு பாடல்களையும் 'மந்திரச் சொல்லாலே' இந்திர ஜாலம் காட்டும் கவிதை என்றே சொல்லவேண்டும்.

ராமநாமத்தை வாலி 'கண்களில் தெரியக் கண்டான்' என்று சொல்லும் போதே, அந்த மூல மந்திரத்தை வருணிக்கும் போதே மந்திரச் சொற்கள் வந்து விழுகின்றன! சொற்களில் இல்லாத இன்பத்தைச்சொற்களால் காட்டும் சக்தி அதிகரிக்கிறது. இந்தச் சக்தியை ஜொலிக்குமாறு தூண்டிவிடுகிறதுபக்தி.

'கண்ணுற்றான் வாலி...' என்ற பாட்டிலே கவிஞனின் மந்திர வித்தை, காணமுடியாத இந்திர ஜாலங்களைக் காட்டுவது போலக் காண்கிறது.

வானம் அளந்த தனைத்தும்
அளந்திடு
வண்மொழி வாழிய வே!

என்றும்,

வானம் அறிந்த தனைத்தும்
அறிந்து
வளர்மொழி வாழிய வே!

என்றும் பாரதியார் பாடுகிறாரே, அந்தத் தமிழ் தான் கம்பனின் மந்திரச் சொல், இந்திர ஜாலக் கவிதை.

தென்னாட்டுச் செல்வங்கள்

99. சிற்பத்திலே தெய்வமும் அவதாரமும் !

அந்தப் பெரிய கோபுரத்திற்கும் சிறிய கோபுரத்திற்கும் நடுவில் இருப்பதுதான் நாம் ஏற்கெனவே பார்த்து அனுபவித்த பொக்கிஷசாலை. ஆம் ; சிற்பப் பொக்கிஷங்கள் அடங்கிய கல்யாண மண்டபம்.

அழகும் அழிவும்

சிறிய அழகிய தூண்களில் உள்ள சிற்பங்களில் அழகு மலிந்து காண்பது போல் அழிவும் (பின்னங்களும்) மலிந்து காண்கிறதே என்பது தான் ரஸிகர்களின் மனக்குறை.


மண்டபத்தின் முன் இருபுறமும் உள்ள இரு கல்-தொட்டிகளுக்கும் நடுவில் பின்னமுற்றிருக்கும் நந்தியைத்தான் பாருங்கள். அழகைப் பின்னாளில் ஆக்கிரமித்துக்கொண்ட அழிவுச் சக்திக்கு மண்டபத்துச் சிற்பங்களைப் போல் இந்த நந்தியும் சான்றுதான்.

இவ்வளவு அழகான கல்யாண மண்டபமும் கோபுரமும் உள்ள கோவிலில் எத்தனையோ ஆண்டுகளாக 'ஸ்வாமி' இல்லாமல் செய்து விட்ட நாசவேலைதான் எத்தகைய வெறியால் தூண்டப்பட்ட அழிவுச் சக்தியாக இருக்க வேண்டும் !

நாசத்திலும் ஒரு நன்மை !

நாச காரியங்களிலும் ஏதோ ஒரு நன்மை கிடைக்குமாறு செய்யும் திவ்ய சக்தி இயற்கைக்கும் ஈசனுக்கும் உண்டு என்பர். வெகு காலமாகப் பூஜை இல்லாமல் இருந்து விட்டதால் தானே தூண்களில் எல்லாம் சுண்ணும்பு அடித்து நுட்ப வேலைப்பாடுகளை நாசமாக அடித்து விடவில்லை !

போகட்டும். இந்தக் கோவிலில் 'ஸ்வாமி' இல்லையென்று தான் எப்



சித்திர ராமாயணம்

வாலி காவியம்

335. ஏச்சும் பரிகாசமும்

அருமருந்தான திருநாமத்தையும், திவ்ய மங்கள மேனியையும் கண்ணால் கண்டும்—ஏன், கண்ணால் கண்டதுமே—ஏசத்தான் செய்கிறான் வாலி. அந்த அபார வசீகர சக்தியும் அந்த நிலையில் துளிகூட வசீகரித்ததாகத் தெரியவில்லை. இந்த நெஞ்சுப் புண்ணுக்கு மருந்தும் மருந்தாக இல்லை; மந்திரமும் ஆறுதல் அளிக்கவில்லை.

ஏசிக் காட்டுகிறான்

தர்ம சிகரத்திலே ராமன் நின்றுகொண்டிருந்தான், வாலி மனக் கண்முன்பு. அந்த உயரத்திலிருந்து — அடடா — எப்படிக் கீழே விழுந்து விட்டான் வாலி கண் முன்பு!

'கருணையென்ற தாய்மைப் பண்பில் நிகரற்றவன் — உலகத்திற்கே ஒரு தாய்!' என்று எண்ணியிருந்தான். 'சேயை வதைக்கும் தாயும் தாயா, பேயா?' என்று அலறுகிறது வாலியின் புண்பட்ட — கோபாவேசம் கொண்ட — நெஞ்சு.



ராமனுடைய அதிசயமான நட்புக் குணம் குறித்தும் கேள்விப்பட்டிருந்தான். வேடக் குகனைச் சகோதரனாக்கித் தழுவிக்கொண்ட அந்தக் கதை கூடக் காதில் விழுந்திருக்கலாம். அப்பேர்ப்பட்டவன் தன்னையும் நண்பனாகக் கொண்டிருக்கலாமே! நண்பனாக்கிக் கொள்ளாவிட்டாலும் இப்படிப் பகை கொண்டு அம்பு போட்டு வதைக்க வேண்டுமா?

ராமனைக் குறித்துக் கேள்விப் பட்டிருந்ததுபோல், சத்தியத்திற்காக உயிர் கொடுத்த தந்தையைக் குறித்தும், தாய் கொடுத்த மகாராஜ்யத்தைத் துச்சமாகத் துறந்து 'பாதுகா பட்டாபிஷேகம்' செய்து வாழும் தம்பி பரதனைக் குறித்தும் கேள்விப் பட்டிருந்தான்.

அந்த மகானுபாவர்களின் நிலை என்ன? இந்த ராமனுடைய நிலை என்ன? வாலி ஏசிக் காட்டுகிறான்:

வாய்மையும் மரபும் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்—
தூயவன் மைந்தனே! நீ
பரதன்முன் தோன்றினாயே!

தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்நால் தீங்கன் ருமோ?
தாய்மையும் அன்றி நட்பும்
தருமமும் தழுவி நின்ருய்!

[மரபு - குலம்; (இங்கு) குலப் பெருமை. மன் உயிர் - சிறந்த தன் உயிரை. வள்ளல் தூயவன் - வள்ளன் மையும் மன மெய்மொழிகளில் தூய் மையும் கொண்ட தசரதன். காத்து— (இங்கே) செய்யாமல் தடுத்து. தீங்கு அன்ற ஆமோ—தீமை அல்லாது ஆகுமோ]

தசரத ராஜகுமாரன் என்ருல் குலப் பெருமைதான் கொஞ்சமோ? மனுகுல திலகமல்லவா? வசிஷ்ட சிஷ்யன் என்ருல் கல்விப் பெருமைதான் கொஞ் சமோ? வில்லின் கல்விதான் கொஞ் சமா? அதனுல் ஏற்படக்கூடிய வெற் றிப் பெருமிதமும் வேறு நலங்களும் கொஞ்சமா? உலகத்திற்கே தலைமைப் பதவி ராமனுக்கு உரியதுதான். ஆனுல் இந்தத் தலைவன் தன்னுடைய பலத்தை எப்படி உபயோகிக்கத் துணிந்தான்?— ஐயோ!

'உலகம் தாங்கும் வண்மை' நன்ரு யிருக்கிறது!—என்று ஏசுகிருன் வாலி:

குலம்இது; கல்விஈது;
கொற்றம்ஈ(து); உற்று நின்ற
நலம்இது; புவனம் மூன்றும்
நாயகம் உன்ன தன்ருே?
வலம்இ(து); இவ் வுலகம் தாங்கும்
வண்மைஈ(து)! — என்ருல்,
திண்மை
அலமரச் செய்ய லாமோ,
அறிந்திருந்(து) அயர்ந்து
ளார்போல்?



[கொற்றம் - வெற்றி. புவனம் மூன்றும் - மூன்று உலகங்களுக்கும். நாயகம் - தலைமைப் பதவி. உன்ன தன்றே - உன்னுடையதன்றே. வலம் - பலம். திண்மை - உறுதி; (இங்கே) அந்த உறுதிகளெல்லாம். அலமர - நிலை கலங்க. அறிந்திருந்து அயர்ந்துளார் போல் - அறிந்திருந்தும் மறந்து விட்டவர் போல்.]

வாலியின் இனப்பற்று

ராமனுக்கு வாலி செய்த தீங்கு தான் என்ன? அரக்கர்கோன் செய்த அழிவுக்குக் குரங்கர்கோனா பழி — பலி?

அரக்கர்ஓர் அழிவு செய்து
கழிவரேல், அதற்கு வேறோர்
குரக்கினத்(து) அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம்எங்(கு) உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா?

[ஓர் அழிவு-ஒரு கேடு. குரக்கினத்து அரசை - வானர இனத்தின் அரசனை. கூறிற்று உண்டோ - கூறியது உண்டோ. உகுத்தாய் - சிந்திச் சொரிந்து விட்டாய். என்பால் - என்னிடம்.]

'ஒரு சாதிக்கு ஒரு நீதி கூறுவது தான் மனுநீதி' என்று இந்நாளில் ஒரு கட்சி வாதிக்கிறதல்லவா? 'ராட்சஸ ஜாதி செய்த தீங்கிற்காக வானர ஜாதிதான் அரசைப் பறி கொடுக்க வேண்டுமா?— பலி கொடுக்க வேண்டுமா? இதுதான் மனுதர்ம சாஸ்திரமா?' என்பது வாலி கட்சி. வாலி மனுவைப் பழிக்கவில்லை; ராமனைத்தான் பழிக்கிறான்!

'இந்த மனிதனிடம் ஒரு பிழையும் கண்டோமில்லை' என்று கிறிஸ்து பகவானைப் போன்ற புருஷோத்தமர்களைக் குறித்து எதிரிகளும் சொல்லக் கூடுமல்லவா? வாலியோ தன்னையும் தானே அத்தகைய புருஷோத்தமர் - கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு, 'என்பால் எப்பிழை கண்டாய் அப்பா?' என்று ராமனையே கேட்கத் துணிகிறான்!

வாலி தனக்காகக்கூட இப்படியெல்லாம் வருந்தவும் இல்லையாம். வானர இனத்திற்காகப் (குரக்கினம்) பரிதவிக்கிறானும், அந்த இனத்திற்கு ஆபத்து வந்துவிட்டதே என்று: ('ஆரிய இனத்திற்கு ஆபத்து' என்று ஹிட்லர் தவிக்கவில்லையா? இன்றும் சிலர் 'திராவிட இனத்திற்கு ஆபத்து' என்று பரிதவிக்கவில்லையா?)

ஒலிகடல் உலகம் தன்னில்
ஊர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து
பரந்ததோ? கருணை வள்ளால்!
மெலியவர் பால தேயோ
ஒழுக்கமும் விழுப்பம் தானும்?
வலியவர் மெலிவு செய்தால்
புகழ்அன்றி வசையும் உண்டோ?

[ஒலிகடல் உலகம் தன்னில் — ஒலிக்கின்ற கடலோடு கூடிய உலகத்திலே. ஊர்தரு — திரிகின்ற. குரங்கின் மாடே — குரங்குகளிடத்தில் மாத்திரம். கலியது காலம் — கலி காலம். பரந்ததோ — பரவி விட்டதோ? கருணை வள்ளால் — கருணை வள்ளலே. மெலியவர் பாலதேயோ — மெலிந்தவர் அல்லது பலவீனர்களிடம்தான் இருக்க வேண்டியனவோ. விழுப்பம் — நற்குணம். மெலிவு — (இங்கே) இழிதொழில்.]

யுகம் நாலு என்பர், — கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று. ராமாயணம் திரேதாயுகத்தில் நடந்ததாம். 'அந்த யுகத்திலேயே கலியுகத்தைக் கொண்டு வந்துவிட்டான் ராமன்!' என்கிறான் வாலி.

கலியுகத்திலும் கிருதயுகம் என்ற பொற்காலத்தைக் கொண்டுவரப் பாடுபடுவர் பக்தர்கள். ராமனோ திரேதாயுகத்தினிடையே கலியுகத்தை ஆரம்பம் செய்து வைத்தது மட்டு மல்ல, இந்தக் கொடிய யுகத்தைப் பரவச் செய்து விட்டானும், தன் கொடிய செயலால்.

'இந்தப் பரந்த உலகத்திலே ஒதுங்கித் திரியும் வானர இனத்திற்குத்தான் கலிகாலம் வந்து பரவிவிட்டதா?' என்று கேட்கும் வாலி, இத்தகைய கொடுமைக்குக் காரணமானவனைக் 'கருணை வள்ளால்!' என்று அழைக்கிறான்!

'சட்டம், ஒழுக்கம் எல்லாம் ஏழை எளியவர்களுக்குத் தானு?' என்று பரிகசிப்பதைத் தான் பாருங்கள். இந்தப் பரிகாச உணர்ச்சி மேலும் அதிகரிக்கிறது,

வலியவர் மெலிவு செய்தால்,
புகழ்அன்றி வசையும்
உண்டோ?

என்று வாலி கேட்கும்போது.

இதற்கும் அதிகமாய்ப் பரிகாசம் செய்ய விரும்புகிறது வாலியுள்ளம். நாட்டிலே தன் தம்பிக்கு ராஜ்யம் கொடுத்து வந்ததுபோல், ராமன் காட்டிலும் வாலி தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுக்கிருனும். 'எல்லாம் முறை தவறிய — சட்டம் மீறிய — செயல் தான்!' என்ற குறிப்புடன் வாலி இடித்துக் காட்டுகிறான்:

கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து,
நாட்டொரு கருமம் செய்தாய்;
எம்பிக்(கு)இவ் அரசை நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய்!
கருமம்தான் இதன்மேல்
உண்டோ?

[கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ — வெற்றிக்குத் துணையாக வேறொருவரையும் வேண்டாத வீரனே; அஸஹாய சூரனே. தாதை—தந்தை. பூட்டிய —(இங்கே) உரிமையாக வலியக் கொடுத்த. போந்து — (காடு) புகுந்து. எம்பிக்கு—என் தம்பி சுக்கிரீவனுக்கு. நல்கி—கொடுத்து.]

இப்படியெல்லாம் பரிகாசம் செய்து விட்டு, 'என் விஷயத்தில் இவ்வளவு அக்கிரமமாக நடந்து கொண்ட நீ, உன் விஷயத்தில் ராவணன் அக்கிரமம் செய்தானென்று கோபிக்கத் தான் என்ன நியாயம் இருக்கிறதப்பா?' என்று கேட்கிறான்:

அறைகழல் அலங்கல் வீரர்
ஆயவர் புரிவ(து), ஆண்மைத்
துறையெனல் ஆயிற் றன்றே!
தொன்மையின் நன்னூற்(கு)
எல்லாம்
இறைவன்நீ என்னைச் செய்த(து)
ஈதெனில், இலங்கை வேந்தன்
முறையல செய்தான் என்று
முனிதியோ? முனிவி லாதாய்!

[அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் - ஒலிக்கின்ற வீரக் கழலும், போர் மாலையும் பூண்ட வீரராயுள்ளவர். புரிவது ஆண்மைத் துறையெனல் ஆயிற்றன்றே -செய்வதெல்லாம் வீரச்செயல் என்பதாகி விட்டதே! தொன்மையின் நன்னூற்கு எல்லாம் - பழமையான நல்ல சாஸ்திரங்களுக்கெல்லாம். இறைவன் நீ - தலைவனான நீ. இலங்கைவேந்தன் - ராவணன். முறையல - நீதி யல்லாத செயல்கள். முனிதியோ - கோபிக்க இடம் உண்டோ. முனிவு இலாதாய் - கோபம் இல்லாதவனே; இகழ்ச்சிக் குறிப்பு.]

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்கிறபடி 'வல்லான் செய்யும் பொல்லாத செயலும் வீரச்செயலாகி விட்டதோ?' என்று மறுபடியும் கேட்கிறான் வாலி. 'இப்பேர்ப்பட்ட நீ ராவணன் மேல் கோபம் கொண்டிருக்கிறாயா? சாந்தகுணபூஷணமே! சொல்லு' என்று கேட்பதில் வாலி பரிகாசத்தின் சிகரத்திற்கே போய் விடுகிருனு? இல்லை, மேலும் போகிறான். ராமனைப் போல் நாமும் பொறுத்துப் பார்க்கலாம்.

*   *   *

வாலி ஏசிக்கொண்டும் பரிகசித்துக் கொண்டும் இருக்கும்போதே, இவன் கண்ட மந்திரமும் மேனியழகும் உள் மனத்திற்குள்ளே வசீகர சக்தியைச் செலுத்திக் கொண்டு தான் இருக்கின்றன.

சித்திர ராமாயணம்



336. தலைசுற்றும் சிகரம்

இரு சகோதரரின் ஒரு விவகாரத்திலே மூன்றாமவன் குறுக்கிட்டது பட்சபாதம் என்றே தீர்மானிக்கிறான் வாலி. ராமனுடைய செயலைப் பட்ச பாதம் இல்லாமலே அந்த நிலையிலும் ஆராய்ந்து பார்த்து இப்படித் தீர்மானிப்பதாகவே வாலியின் எண்ணம்.

தருமமா?......பட்சபாதமா?

தன் கோபாவேசத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு தர்க்க ரீதியாகத் தன் தீர்மானத்தை வெளியிடும் வாலியைப் பாருங்கள்:

இருவர்போர் எதிருங் காலை,
இருவரும் நல்உற் றாரே,
ஒருவர்மேல் கருணை தூண்டி,
ஒருவர்மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி
வாயம்பு மருமத்(து) எய்தல்
தருமமோ? பிறிதொன் றாமோ?
தகுகில(து) என்னும் பக்கம்!



[போர் எதிருங் காலை — எதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருக்கும் காலத்தில். நல் உற்றாரே — நல்ல உறவினராகவே கருதவதை விட்டு. வரிசிலை — கட்டமைந்த வில்லை. குழைய வாங்கி—நன்றாக வளைத்து. வாய் அம்பு — (கூர்மையான) நுனியுள்ள அம்பு; பாணம். மருமத்து எய்தல் — மார்பிலே எய்வது. பிறிது ஒன்றாமோ — தர்மம் அல்லாதது ஆகுமோ. தகுகிலது — தகாதது. என்னும் — என்று சொல்லப் படுகிற. பக்கம் — பட்சம்; (இங்கே) பட்சபாதம்.]

அக்கிரமத்தின் மர்மம்

ஆனால் வாலிக்கு இவ்வளவு தெளிவாகத் தெரியும் இந்த விஷயம் ராமனுடைய புத்திக்கு ஏன் தான் விளங்கவில்லையோ? இது குறித்தும் வாலியுள்ளம் பட்சபாதம் இல்லாமல் — ஏன், அனுதாபத்துடன் தானே — சற்று ஆலோசித்துப் பார்த்தது.

புத்தித் தெளிவுள்ளவன், சித்தப்பிரமை இல்லாதவன், செய்யக்கூடிய காரியமா இது? ஆனால் ராமன் இந்தக் காரியம் செய்ததற்குக் காரணம் தான் என்ன? அகாரணமான அக்கிரமம் என்று ஒரே அடியாகக் கண்டிப்பது தான் சரியா? இத்தகைய மனநிலையில் வாலி பேசினான்:

கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்,
ஓவியத்(து) எழுத வொண்ணு
உருவத்தாய்! உடைமை அன்
றே?

ஆவியைச், சனகன் பெற்ற
அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை!

[கோ இயல் தருமம் — அரசியல் தருமம். ஓவியத்து எழுத வொண்ணு உருவத்தாய் — சித்திரத்தில் எழுத முடியாத வடிவழகை உடையவனே. உடைமை அன்றே - குலதனமாகிய பொதுவுடைமையல்லவா? பிரிந்த பின்னை - பிரிந்த பின்பு. செய்கை திகைத்தனை போலும் - இன்னது செய்வதென்று தெரியாமல் ஒன்று நினைத்து ஒன்றைச் செய்து விட்டாய் போலும்!]

காதலியின் பிரிவு தான் ராமனுடைய திகைப்பிற்குக் காரணம் போலும் என்கிறான் வாலி. அதனால் ஏற்பட்ட சித்தப்பிரமை செய்கைப் பிரமைக்குக் காரணமாயிருக்கக் கூடுமல்லவா? ராமன் செய்த ராஜ தர்மக்கொலைக்கு வேறு எப்படித் தான் சமாதானம் சொல்ல முடியும்?

ராமன் மீது விசேஷ மதிப்பு வைத்திருந்தவனல்லவா? இந்த மதிப்பும் ஏசல்களுக்கிடையே தலை காட்டுகிறது. 'அறிந்திருந்தும் மறந்து விட்டவர் போல் நடந்து கொள்ளலாமா?' என்று வாலி கேட்க வில்லையா?

'பிறர் தீமையைத் தடுப்பவன் தானே தீமை செய்யலாமா?' என்று ஏசிக் காட்டும்போதே,

தாய்மையும் அன்றி, நட்பும்
தருமமும் தழுவி நின்றாய்!

என்று போற்றவில்லையா? எனவே,

தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை!

என்று வாலி சொன்னது இவனுடைய மனப்போக்கிற்குப் புறம்பானதல்ல என்று கருதலாம்.

கோபத்திற்குமேல் கோபம்

இந்த மனநிலையை விரைவில் கடந்து போகிறது கோபம். இந்தக் கோப வெறி வாலியை எங்கெல்லாம் இழுத்துப் போகிறது!

வீரம் அன்றுவி—
தியன்று: மெய்ம்மையின்
வாரம் அன்று; நின்
மண்ணினுக்(கு) என்னுடல்
பாரம் அன்று; ப—
கையன்று; பண்(பு)ஒழிந்(து)
ஈரம் அன்(று) இது
என்செய்த வாறுநீ?

[மெய்ம்மையின் வாரம் அன்று — உண்மையைச் சேர்வதல்ல. பண்பு ஒழிந்து — நல்ல குணத்தை விட்டு. ஈரம் அன்று இது — நெஞ்சில் ஈரம் இல்லாத இச் செயலை. செய்தவாறு என் — செய்ததற்குக் காரணம் என்ன.] என்ற வாலி கேள்வியில், பழைய மதிப்பெல்லாம் பறந்து போகிறது.

ராஜதந்திரமும் இல்லையே!


ஆகவே ராமனுடைய செயல் அகாரணமான அக்கிரமம் என்றே வாலி மீண்டும் கோபிக்கிறான். ராஜ தர்மத்தை விட்டு ராஜ தந்திரமாக ராமன் நடந்து கொண்டான் என்றும் வாலியால் நம்ப முடியவில்லை. 'சிங்கத்தை விட்டு முயலைத் துணைக் கொண்டாயே!' என்று ஏசுகிறான்:

முயலைப் பற்றுவ(து)
என்னமு யற்சியோ?

சிங்கமாகிய வாலியை விட்டுச் சுக்ரீவ முயலைப் பற்றி நிற்பது தான் ராஜ தந்திரமா? சித்தப் பிரமைதான், செய்கைத் திகைப்பே தான்; பைத்தியக்கார முயற்சியே தான்!

சூரியனுக்கும் களங்கம்

இத்தகைய கோபத்திலே, ராமனுடைய களங்கம் அவனுடைய சூரிய குலத்தை யெல்லாம் களங்கப்படுத்தி விட்டதாகத் தோன்றுகிறது:



கார் இயன்ற
　நிறத்த களங்கம்ஒன்(று)
ஊர் இயன்ற
　மதிக்குள தாம்எனச்,
சூரி யன்மர —
　புக்கும்ஓர் தொல்மறு
ஆரி யன்பிறந்(து)
　ஆக்கினை யாமரோ?

[கார் இயன்ற — கருமை பொருந்திய. நிறத்த — நிறத்தையுடைய. ஊர் இயன்ற — ஊர்களில் எல்லாம் சஞ்சரிக்கிற. மதிக்கு — சந்திரனுக்கு. உளதாம் என — உள்ளதாகும் என்று. சூரியன் மரபுக்கும் — சூரிய வம்சத்திற்கும். ஓர் தொல் மறு — (இங்கே) முன்னோரையும் தொடக்கூடிய களங்கம். ஆரியன் — தலைவன். ஆக்கினையாம் — உண்டாக்கினை போலும். அரோ — அசை.]

'சந்திரனுக்குத் தான் தொன்று தொட்டுக் களங்கம் இருக்கிறது "சூரியனுக்கும் அப்படி ஒரு களங்கம் இருக்க வேண்டியதுதான்!" என்று அந்தக் குறையையும் ராமன் உண்டாக்கி விட்டான் போலும்' என்கிறான் வாலி.

சந்திரனுக்குள்ள அந்தத் தொன்மையான மறு ('தொல்மறு')வையே சூரியனுக்கும் உண்டாக்கி விட்டானாம். புதிதாக ராமனால் ஏற்பட்ட இந்தக் களங்கம் முன்னோர் முகத்திலும் கரிபூசக் கூடியதுதானாம்.

வாலியின் 'ஆரியன்'

'இப்படிச் சூரியனுக்கும் ஒரு தொன்மையான களங்கத்தை உண்டாக்கிய நீயே சரியான ஆரியன்!' என்கிறான் வாலி. 'ஆரிய'னைப் பழிக்கும் இன்றைய கட்சித் 'திராவிடன்' போலல்ல. வாலி வாக்கில் — ஏன், பழைய இலக்கியத்திலே — ஆரியன் என்றால் 'மேலோன்,' 'தலைவன்,' அல்லது ஆரிய பாஷைக்கு உரியவன். பழைய இலக்கியம் எங்கும் — வாலி வாக்கிலும், அரக்கர் வாக்கிலும் கூட — 'ஆரியன்' ஓர் இனத்தைச் சுட்டிக் காட்டுவதில்லை. திராவிட ஆரிய இனப் பூசல் ஒரு நவீனக் கற்பனை.

தரும கோபமா?

இது நிற்க. வாலி கோபமோ மேலும் மேலும் இழுத்துச் செல்லுகிறது. வாலியை மேகங்கள் மீதும் செங்குத்தான பாறைகள் மீதும் கொண்டு போகிறது:

நூலி யற்கையும்
  நும்குலத்(து) உந்தையர்
போலி யற்கையும்
  சீலமும் போற்றலை,
வாலி யைப்படுத் —
  தாயலை; மன்னற
வேலி யைப்படுத்
  தாய் ;விறல் வீரனே!

[நூல் இயற்கை - அறநூலின் முறை. நும்குலத்து - உங்கள் குலத்து. உந்தையர் - உங்கள் முன்னோர். உந்தையர் போல் இயற்கை — உங்கள் தாதை மூதாதையர் போன்றவர்கள் அனுசரித்த முறையும். சீலம் - நல்லொழுக்கம். போற்றலை - போற்றாமல். வாலியைப் படுத்தாய் அலை - வாலியை நீ அழிக்கவில்லை; மன் அறவேலி — ராஜ தர்மம் என்ற வேலி. படுத்தாய் - அழித்து விட்டாய். விறல் வீரனே - வலிமையுள்ள வீரனே.]

வில்லும் வீரம் பழிக்கிறதாம்

'வாலியையா அழித்தாய்? தரும வேலியை அழித்தாய்!' என்ற ஏச்சிலே வாலி ஒரு கோபசிகரத்தையே அடைந்து விட்டான்! தரும கோபம் என்ற சிகரம்தான் என்று எண்ணம்.

சிகரத்திற்குமேல் சிகரம் தெரிகிறது; அதிலும் தாவி நின்று பேசுகிறான், ஏசுகிறான்:

தாரம் மற்றொரு —
  வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை,
  வீரம் பழிப்பதே!
நேரும் அன்று,
  மறைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ,
  வில் இகல் வல்லதே?

[தாரம் - மனைவி. பாரவெஞ்சிலை - பாரமாகவே அமைந்திருக்கும் கொடிய வில். நிராயுதன் - ஆயுதம் இல்லாதவன். மார்பின் - மார்பிலே. வில் இகல் வல்லதே - விற்போரில் வல்லமை பெற்றிருப்பது.]

'உன் மனைவியை அன்னியன் ஒருவன் கவர்ந்து கொள்ள, நீ கைக்குப் பாரமாக வில்லையும் சுமந்து கொண்டிருக்கிறாயே! அந்தக் கொடிய வில் உன் வீரத்தைப் பழிக்கிறதே! அந்தப் பழிப்பு என் காதில் விழுகிறதே, உன் காதில் விழவில்லையா?' என்று கூசாது ஏசுகிறான் வாலி. ராமனுடைய விஜய கோதண்டமே ஏசுகிறதாம், நாக்கை நீட்டிக்கொண்டு, வாலியைப் போலவே! கோபத்தின் தலை சுற்றும் சிகரத்திலே நிற்கிறான் வாலி இப்போது!

இந்த வேகத்திலே நெறு நெறு என்று பல்லைக் கடிப்பதும் காதில் விழுகிறது. ராமன் காதில் விழுவது போல் நம் காதிலும்தான்.

விழி வழியே பறக்கும் நெருப்புப் பொறிகள் வந்து விழுந்து சுடுகின்றன!......அடுத்த வாரம் பார்ப்போம்.

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

337. எரிமலையில் மழைத் துளிகள்


கோப சிகரத்திலே நின்று கொண்டு, 'இதற்கு மேல் ரோசம் உண்டாக ஏச முடியாது' என்று சொல்லும்படி வசைக்கணைலக் கொட்டினான் வாலி. ராமன் என்ன மறுமொழி சொல்லப் போகிறான், பார்க்கலாம்.

'குற்றமில்லாத உன் தம்பியைக் கொல்ல முயன்றாயே' என்று தான் பேசத் தொடங்குகிறான். வாலியின் கோபத் தீ வெடிபடும் எரிமலையிலிருந்து நெருப்புக் குழம்பைக் கக்கிக் கொண்டிருக்க, ராமன் சில வார்த்தைகளைச் சொல்லலானான்.

அலங்காரமில்லாத — சக்திக் கனலாகிய — பாஷையில் வெளிப்படுகிறது இக்காட்சி:

என்று தானும்
எயிறு பொடி
படத்
தின்று, கான்று
விழிவழித்
தீயுக,
அன்ற வாலி
அனையன
கூறினான்;
நின்ற வீரன்
இனைய நிகழ்த்
தினான்.

[எயிறு—பற்கள். பொடிபடத் தின்று—நெறு நெறுவென்று கடித்துக்கொண்டு. விழிவழி—கண்களின் வழியாக. தீ உகக் கான்று—நெருப்புப் பொறி சிந்தும்படி உமிழ்ந்து; பொறிகள் சிந்தும்படி நெருப்பைக் கக்கி. அன்று அ(வ்) வாலி—அப்போது அந்த வாலி. அனையன — அத்தன்மையுள்ள வார்த்தைகளை. நின்ற வீரன் — எதிரே நின்ற ராமன். இனைய நிகழ்த்தினான் — இத்தன்மை வாய்ந்த சொற்களைச் சொல்லலானான்.]



வாலியின் தர்ம வதம்

முன்பு நிகழ்ந்த செய்தியை எடுத்துச் சொல்லுகிறான் ராமன் வாலியை நோக்கி:

கொல்ல லுற்றனை
உம்பியைக், கோ(து) அவற்(கு)
இல்லை என்ப(து)
உணர்ந்தும் இரங்கலை...

[கொல்லல் உற்றனை - கொல்லத் தொடங்கினாய். உம்பியை - உன் தம்பியை. கோது அவற்கு இல்லை - குற்றம் அவனிடம் இல்லை. இரங்கலை - இரக்கம் கொள்ளவில்லை.]

அஞ்சி அபயம் என்று சுக்ரீவன் முறையிட்டுக் கொண்டும், 'உனக்குத்

தோற்றேன் ' என்று ஒப்புக்கொண்டு அஞ்சலி செய்தும், அந்தத் தம்பியிடம் இரக்கப்படவில்லை என்பதையும் ஞாபகப்படுத்துகிறான்.

வலி பிழந்து ஓடிய தம்பியைத் துரத்தித் துரத்தியடித்துக் கொல்ல முயன்ற வாலி, வீரதர்மத்தையே வதைக்கப் பார்த்தானும்.

வாலி தம்பியின் மனைவியையும் கவர்ந்து கொண்டானல்லவா? அந்தச் செயலால், வீரதர்மத்துடன் பொதுவாகத் தர்மத்தையே கொலை செய்ய முயன்றதாகவும் வாலிமீது ராமன் குற்றப் பத்திரிகை படிக்கிறான்.

இத்தகைய குற்றவாளிக்குக் கொலைத் தண்டனை விதித்து விட்டதாகச் சொல்லுகிறான்.

ஏதி லாரும்,
எளியர்என் றுரையும்,
தீது தீர்ப்பதென்
சிந்தைக் கருத்தரோ.

[ஏதிலாரும் — யாதொரு தொடர்பும் இல்லாத அயலாரையும். எளியர் என்றுரையும் — முக்கியமாக எளியவரையும். அரோ — அசை.]

என்று கூறி முடிக்கிறான். சுக்கிரீவன் தனக்குப் பிராண சிநேகிதன் (' ஆருயிர்க் காதலன் ') என்பதையும் வற்புறுத்துகிறான்.

இப்படிப் பதினொரு கவிகளில் வாலிவத நியாயம் கூறு



கின்றான் ராமன். இக்கவிகளில் பொதுவாகக் கம்பனது கவி வளத்தையும் காணமுடியவில்லை.

வாலி சொல்லும் நியாயம்

ராமன் சொல்லும் வாலி வத நியாயம் போதுமா? வாலி பேசிய வேகம் எங்கே? ராமன் பதில் சொல்லும் வேகம் எங்கே? இனி, வாலியின் எதிர் மொழியையும் கேட்போம்.

ராமனுடைய தர்ம விவகாரம் வானர இனத்திற்குப் பொருந்தாது என்பது வாலி கட்சி. தன்னுடைய செயல்கள் தன்னுடைய இனத்திற்கு இயற்கையானவை என்று வாதாடுகிறான்:

மணமும் இல்லை
 மறைநெறி வந்தன,
குணமும் இல்லைக்
 குலமுதற்(கு) ஒத்தன,
உணர்வு சென்றுழிச்
 செல்லும் ஒழுக்கலால்!

[மறைநெறி வந்தன மணமும் இல்லை—வேதநெறிப்படி வந்த திருமண முறைகள் எங்களுக்கு இல்லை. குணமும் இல்லை, குல முதற்கு ஒத்தன—குல முறைக்கு ஒத்த குணங்களும் எங்களுக்கு இல்லை. உணர்வு சென்றுழி—உணர்ச்சி சென்ற வழியே. செல்லும் ஒழுக்கலால்—செல்லுகிற ஒழுக்கம் அல்லாமல்.]

'உணர்ச்சி சென்ற வழியெல்லாம் செல்வதுதான் எங்கள் இனத்திற்குரிய ஒழுக்கம்' என்ற வாலியின் கூற்றுக்குப் பொருள் தெளிவுதானே? வாலியின் இந்தப் பேச்சிலும் இவனுக்குரிய ஜீவவேகமாவது, கம்பனுடைய கவிவளமாவது காணப்படவில்லை.

ராமனின் எதிர்மொழி

வாலிக்கு மீண்டும் எதிர்சொல்லத் தொடங்குகிறான் ராமன். மூன்று கவிகளில் வாலி சொன்ன சமாதானத்தை, ஒன்பது கவிகளில் மறுத்துப் பேசும் ராமன், மிருகச் செயல் வாலிக்கு அடாது என்பதையும், வாலி செய்த தவறு தவறுதான் என்பதையும் வற்புறுத்துகிறான். இந்தப் பாடல்களிலும் பெரும்பாலும் கவிவளமாவது ஜீவவேகமாவது காணப்படவில்லை.

அறநெறியை வாலி அறிந்திரா விட்டால், ராமன் அறநெறி தவறியதாக வாலி விவகரித்தானே அது எப்படி? பகுத்தறிவு இல்லாமலா வாலி ராமனையே விவகாரத்தில் எதிர்த்து முறியடிக்க முன் வந்தான்?

நின்ற நன்னெறி
 நீ அறி யாநெறி
ஒன்றும் இன்மை,உன்
 வாய்மை உணர்த்துமால்!

[நின்ற நன்னெறி—நிலைபெற்ற நன்னெறிகளில். நீ அறியா நெறி ஒன்றும் இன்மை—நீ அறியாதது ஒன்றும் இல்லையென்பதை. உன் வாய்மை—(இங்கே) நீ வாய்ப் பேச்சாக விவகரித்த விஷயங்கள். உணர்த்தும்—தெரிவிக்கும். ஆல்—அசை.].

என்று வாலி வாயடைக்கப் பேசுகிறான் ராமன்.

ஓர் அரும் பெருங்கொள்கை

இனி, ஓர் அருமையான கொள்கை வெளிப்படுகிறது ராமன் வாயிலாக:

'தக்க இன்ன,
 தகாதன இன்ன' என்(று)
ஒக்க உன்னல—
 ராயின், உயர்ந்துள
மக்க ளும்விலங்கே!

[தக்க இன்ன—தகுதியானவை இவை. ஒக்க உன்னலராயின்—ஒப்பிட்டு ஆராய்ந்து பகுத்தறியாதவர்களானால். உயர்ந்துள—(பகுத்தறிவைத் தவிர வேறு அம்சங்களில்) உயர்ந்தன. விலங்கே—மிருகங்களே.]

'பகுத்தறிவு இல்லாத இருகால்—பிராணிகளும் மிருகங்களே' என்பது எவ்வளவு உயர்ந்த கொள்கை! பகுத்தறிவு இல்லாமல் 'உயர் திருவாளர்'

என்று உயர்ந்து விட்டாலும் அந்த மனிதனும் மனிதன் அல்லன், விலங்கு தான்.

'உடைமைகளால் உயர்ந்தென்ன? பலத்தால் உயர்ந்தென்ன? குலத்தால் உயர்ந்தென்ன? பகுத்தறிவு இல்லாவிட்டால் மக்களும் விலங்கே!' என்ற இந்தப் பெருங் கொள்கைக்குத் தமிழகத்திலே உயர்ந்த இலக்கிய பரம்பரை உண்டு.

தமிழ் வேதமாகிய திருக்குறளில் இப் பெருங் கொள்கையையும் பார்க்கிறோம்:

விலங்கொடு மக்கள் அனையர்,
இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர்.

சிறந்த நூல்களைக் கற்றுப் பகுத்தறிவை வளர்த்துக் கொண்டவர்களுக்கும், அத்தகைய கல்வி யறிவும் ஆராய்ச்சித் திறனும் இல்லாதவர்களுக்கும் இடையே, மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்ற திருவள்ளுவரின் சித்தாந்தத்தை அவருடைய ஞான புத்திரனாகிய கம்பனும் தன் காவிய நாயகன் வாயிலாக வெளியிடுகிறான்.

தொல்காப்பியரும் இப்பெருங் கொள்கையை வெளியிட்டிருக்கிறார்:

மக்கள் தாமே ஆறறி வுயிரே.

மற்றப் பிராணிகளுடன் மனிதப் பிராணிக்கும் ஐம்பொறி உணர்வாகிய பஞ்சேந்திரிய உணர்வு உண்டு. அத்தகைய உணர்வு பிராணிகளுக்கெல்லாம் பொதுவுடைமை. அத்தகைய அறிவுடன் மன அறிவு மனிதனுக்கு விசேஷ உடைமை என்று தொல்காப்பியம் என்ற இலக்கணமும் தெரிவிக்கிறது. பகுத்தறிவு இல்லாத மக்களை 'மாக்கள்' என்று மிருக வர்க்கத்துடன் சேர்த்துப் பேசுவர் தொல்காப்பியர்.

இத்தகைய பழந்தமிழ்ப் பெருங் கொள்கையை வெளியிடும் ராமன், வாலியைப் பகுத்தறிவுள்ள மனிதன் போலவே மதிக்கிறான். மதித்து, 'நீ நெறிநின்று சிவபூஜை செய்த புண்ணிய பலனாக எவ்வளவோ மகிமையை ஒருசேர அடைந்தாய்; தம்பியைக் கொல்ல முயன்று அவன் மனைவியைக் கவர்ந்து தருமக் கொலை செய்த பாவ பலனாக என்னால் கொலைத் தண்டனை விதிக்கப் பெற்றாய்' என்று கூறி முடிக்கிறான்.

'நீயும் அறம் கொன்றாய்!'

வாலி இப்போது ராமனுடைய வார்த்தையைப் பொறுமையாகக் கேட்டுத் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு வேறொரு கேள்வியால் ராமனை மடக்கப் பார்க்கிறான்.

'என்னிடம் பகுத்தறிவு இருப்பதால் நான் விலங்கல்ல, குற்றவாளி தான் என்றாயே. அப்படி நான் மனிதன் போல் கௌரவிக்கத் தக்கவன் என்று நீ கருதியதாகவும் தெரியவில்லையே! மிருகங்களைக் கொடிய வேடர்கள் மறைந்து நின்று எய்வது போலத் தானே நீயும் மறைந்து நின்று என்மேல் அம்பு போட்டாய்!' என்கிறான்.

'பகுத்தறிவுள்ள நான் இல்லற முறைக்கு மாறாகத் தம்பி மனைவியைக் கவர்ந்து கொண்டேன் என்கிறாய். பகுத்தறிவுள்ள நீ என்னை எதிர்த்துப் போர் புரியாமல் வில்லற முறைக்கு விரோதமாக ஒளிந்து நின்று அம்பு போட்டாயே, இது என்ன நியாயம்?' என்பது வாலியின் இறுதிக் கேள்வி.

'நீயும் அறம் கொன்றாய்!' என்ற இந்தக் குற்றச் சாட்டுக்கு ராமன் பதில் சொல்லவில்லை. லட்சுமணன் தான் பதில் சொல்லப் போகிறான். வாலி கேள்வியைக் கவிதை வாயிலாகவே கேட்போம் அடுத்த வாரம்.

பிறகு லட்சுமணனுடைய சமாதானத்தையும் ஆராய்ந்து பார்க்கலாம்.

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

பி. ஸ்ரீ

338. மறைந்து நின்ற மர்மம்

தன்னை ராமன் மறைந்து எய்ததற்குக் காரணம் கேட்கும் வாலி, 'கொடிய வேடர்கள் மறைந்து நின்று மிருக வேட்டையாடுவது போல் என் மேல் நீ அம்பு போட்டதற்கு என்ன நியாயம் தான் இருக்க முடியும்?' என்று காரசாரமாகவே கேட்டு விடுகிறான்.

வாலி வினவும் லட்சுமணன் விடையும்

உயிர்களை யெல்லாம் ஆளும் சிறப்பை யுடைய ராமன் உண்மையில் அரசனா, வேடனா? ராமன் தன்னை மறைந்து நின்று வதம் செய்வது ராஜ தர்மமா, வேடர்களின் காட்டுச் சட்டம் தானா?

இப்படி வாலி வினவ, அதற்கு ராமன் விடை கூறாமல் லட்சுமணன் விடை யளிக்கத் தொடங்குகிறான்:



அவ்வுரை அமையக் கேட்ட
அரிகுலத்(து) அரசும், 'ஆண்ட
செவ்வியோய்! அனைய தாகச்,
செருக்களத்(து) எதிர்த்(து) எய்யாதே,
வெவ்விய புளிஞ ரென்ன
விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய(து) என்னை?' என்றான்;
இலக்குவன் இயம்ப லுற்றான்.

[அவ்வுரை – அந்த வார்த்தையை. அமையக் கேட்ட – உள்ளத்தில் பதியுமாறு நன்றாய்க் கேட்ட. அரிகுலத்து அரசும் – வானரகுல ராஜாவாகிய வாலியும். ஆண்ட செவ்வியோய் – ஆளுகின்ற சிறப்பு வாய்ந்தவனே. அனையதாக – அப்படியானால். செருக்களத்து - போர்க்களத்தில். எய்யாதே - அம்பு தொடுக்காமல். வெவ்விய - கொடிய. புளிஞர் - வேடர். விலங்கியே - விலகி. எவ்வியது - ஏவியது. என்னை - என்ன நியாயமோ. இலக்குவன் - லட்சுமணன். இயம்பலுற்றான் - சொல்லத் தொடங்கினான்.]

இனி லட்சுமணன் அளிக்கும் விடையையும் கேட்போம். அண்ணனைப்போல் லட்சுமணன் பல கவிகளால் விடை கூறவில்லை. முதலில் பதினொரு கவிகளாலும் மறுபடியும் ஒன்பது கவிகளாலும் வாலி வத நியாயம்

சொன்னான் ராமன். லட்சமணனோ ஒரே கவியில் வாலி வாயடைக்கப் பேசுகிறான். ராமன் பேசிய இருபது கவிகளாலும் தெளியாத சந்தேகங்களெல்லாம் லட்சுமணன் பேசிய ஒரே கவியால் தெளிந்து போகின்றனவாம்.

இப்படிப்பட்ட ரத்தினச் சுருக்கமான வார்த்தை தான் என்ன? அறிய ஆவலாய் இருக்கிறீர்களல்லவா? கேளுங்கள் :

'முன்புநின் தம்பி வந்து
 சரண்புக, முறையி லோயைத்
தென்புலத்(து) உய்ப்பன் என்று
 செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக் காகி
 "அடைக்கலம் யானும்" என்பாய்
என்பது கருதி அண்ணல்
 மறைந்துநின்(று) எய்த(து)'
என்றான்.

[முறையிலோயை - நீதி முறை தவறிய உன்னை. தென்புலத்து - யமலோகத்திற்கு. உய்ப்பன் - அனுப்புவேன். செப்பினன் - (இங்கே) அபய வாக்கு அளித்தான். செருவில் - போர்க்களத்தில். நீயும் அன்பினை உயிருக்காகி - நீயும் உன் உயிர்மீது ஆசையுள்ளவனாகி. அடைக்கலம் யானும் என்பாய் - நானும் உனக்கு அடைக்கலம் என்று சொல்வாய்.]

'என் அண்ணன் உன்னை என் எதிரில் வந்து கொல்லவில்லை தெரியுமா? முதலில் உன் தம்பி வந்து சரண



மடைந்துவிட்டான். அவனுக்கு அப்போதே அபயம் அளித்து உன்னைக் கொல்வதாக வாக்களித்து விட்டான் அண்ணன். உன் உயிர் உள்ளவரையும் அவன் உயிருக்கு ஆபத்தே என்ற நிச்சயத்துடன்தான் உன்னை யமலோகத்துக்கு அனுப்புவதாக அபயவாக்கு அளித்தான். அந்த வாக்கை எப்படி நிறைவேற்றுவது? போர்க்களத்தில் உனக்கு எதிரே வந்து போர் செய்தால் நீயும் உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பிச் சரணம் அடைந்திடுவாய். சரணம் அடைந்தவரைக் கொல்ல முடியாதே. அதனால் வாக்கு நிறைவேறாதே. அந்த உத்தேசம் கொண்டுதான் அண்ணன் மறைந்து நின்று உன் மேல் அம்பு எய்தான். இது தவிர வேறு காரணம் இல்லை'— இதுதான் லட்சுமணனின் சுருங்கிய வாக்கில் பொதிந்து கிடக்கும் நீண்ட வாதம்.

இந்த வாதம் எப்படி? ஆலோசித்துப் பாருங்கள். உங்களுக்குத் தகுதியான வாதம் என்று தோன்றுகிறதா?

திடீரென்று மனச் சமாதானம்

நமக்கு எப்படித் தோன்றினாலும் வாலி மனச் சமாதானம் அடைந்து லட்சுமணனுடைய வாதத்தை ஏற்றுக் கொள்கிறான்:

கவிகுலத்(து) அரசும், மன்னன்
கட்டுரை மனத்திற் கொண்டான்,
அவியுறு மனத்த னாகி,
'அறந்திறன் அழியச் செய்
யான்,
புவியிடை அண்ணல்' என்ப(து)
எண்ணினன், பொருந்த முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
சென்னியின் இறைஞ்சிச்
சொன்னான்.

[கவிகுலத்து அரசும் - வானரகுல ராஜாவாகிய வாலியும். மன்னன் கட்டுரை - மன்னனுடைய பொருள் பொதிந்த சொல். அவியுறு மனத்தன் ஆகி - அடங்கிய மனத்தை யுடையவனாகி. அறத்திறன் அழியச் செய்யான்- அறத்தின் உறுதி அழியும்படி ஒன்றும் செய்ய மாட்டான். புவியிடை அண்ணல் - பூலோகத்திலே பெருமையில் சிறந்த ராமன். எண்ணினன் - எண்ணினவனாகி. முன்னே செவியுறு கேள்விச் செல்வன் - முன்னமே, அதாவது இளமையிலேயே, பல பெரியோரிடம் கேட்டு வைத்துக் கொண்ட கேள்விகளாகிய செல்வத்தை யுடைய வாலி. சென்னியின் இறைஞ்சி - தலையால் வணங்கி.]

லட்சுமணனுடைய வார்த்தையைப் பொருள் பொதிந்த - தகுதி வாய்ந்த - வார்த்தையாகவே மனத்தில் கொள்கிறான் வாலி. ஏனென்றால் வாலி அறிவாளி; சிறந்த கல்வி கேள்விகளை உடையவன். இளமையை வீணாக்கி விட்டவனில்லை.

செல்வத்துள் செல்வம்
செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

என்று தமிழ் வேதமாகிய திருக்குறள் தலைசிறந்த செல்வமாகப் போற்றும் செவிச் செல்வத்தை யுடைய பாக்கியசாலிதான் வாலி.

ஆகவே லட்சுமணன் சொன்ன பொருள் பொதிந்த வார்த்தையைக் கேட்டு உள்ளத்தில் வாங்கிக் கொண்டானும். இதன் பயனாக, ராமன் அறத்திறன் அழியும்படி ஒன்றும் செய்யமாட்டான் என்ற எண்ணம் உண்டாகிறது. இந்த எண்ணம் தோன்றவே மனச் சமாதானம் வருகிறது. இதய சாந்தி ஏற்படுகிறது.

மனம் அடங்கிய வாலிக்குக் கோப தாபங்கள் ஒழிந்து போகின்றன. அகங்காரம் போய் விடுகிறது. 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று சொல்லுகிறபடியே தன் வினைக்குத் தகுந்த விளைவுதான், தக்க பலன்தான், கிடைத்து விட்டதென்று தெரிந்து கொள்கிறானும்.

வாலியின் வணக்கம்

அநியாயக்காரன் என்று இது வரை இகழ்ந்து வசைமாரி பொழிந்த அந்த ராமன் காலில் விழ வேண்டு மென்று தோன்றுகிறதாம்.

ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய ஆசைப்படுகிறது உள்ளம். ஆனால் உடம்பில் சக்தி இல்லை. அஞ்சலி செய்வோமென்றாலும், தன் நெஞ்சை உருவிக்கொண்டிருந்த அம்பைப் பிடித்துக் கொண்டிருக்கும் கைகளால் எப்படித்தான் வணக்கம் செலுத்த முடியும்? எனவே அஞ்சலி செய்யும் சக்தியும் இல்லாதவனாய்த் தலை வணக்கத்தால் மட்டும் உளம் நிறைந்த வணக்க உணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறான்.

'கட்டுரை' சரியா?

சரி; இப்படியெல்லாம் வாலி சமாதானமடைந்தும், நமக்கு மனச் சமாதானம் ஏற்படுகிறதா? லட்சுமணன் 'கட்டுரை' நமக்குத் திருப்தி யளிக்கிறதா? தகுதி வாய்ந்த வார்த்தையாகத் தோன்றுகிறதா?

எதிரில் வந்து ராமன் போர் செய்தால் வாலியும் பயந்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக் காலில் விழுவான் என்றானே லட்சுமணன் — இது வீர வாலியின் குணாதிசயத்திற்கு உரிய நீதி செலுத்துவதாகுமா?

'வரம்பில் ஆற்றலான்' (எல்லையில்லாத வலிமையுள்ள வீரன்) என்றும்,

அந்த கன்தனக்(கு)
அரிய ஆணையான்

[அந்தகன் தனக்கு — யமனுக்கும் கூட. அரிய ஆணையான் — மீற முடியாத கட்டளையிடக் கூடியவன்.]

என்றும், அனுமன் ராமலட்சுமணர் கேட்க வருணித்திருக்கும் வாலியா உயிருக்கு அஞ்சிக் காலில்விழப்போகிறவன்? இதை லட்சுமணன் எப்படித்தான் நம்புகிறானோ? வாலியையும் எப்படி நம்பச் செய்து விடுகிறானோ?

போகட்டும். யார் போர் செய்ய எதிரில் வந்தாலும் அவர்களுடைய பலத்தில் பாதி பாகம் வாலிக்கு வந்து விடும் என்பதைத்தான் லட்சுமணன் அறியாதவனா? தேகபலம் மட்டுமா? வரபலத்திலும் பாதி வாலிக்கு வந்து விடுமே!

அனுமன் ஐயம்திரிபுகளுக்கு இடமில்லாமல் தெளிவாக எச்சரிக்கை செய்தானல்லவா?

பலத்தை உறிஞ்சும் இக் கொடிய சக்தி வாலிக்கு உண்டென்பதைத் தெரியாமல் தானே மாயாவி என்ற அசுரப் பகைவன் எதிர்த்து முட்டி மருண்டு ஓடிப் போனான்? இந்தக் கதையையும் ஓர் எச்சரிக்கை போல் சொல்லி வைத்திருக்கிறானே அனுமன்!

ராமன் வாலியைக் கொல்வதாக வாக்களித்ததும் சுக்கிரீவன் மிகவும் மகிழ்ச்சியடைந்த போதிலும், அனுமன் முதலியவரோடு தனியே யிருந்து ஆலோசித்துப் பார்த்தவனல்லவா? அப்போது, சுக்கிரீவனுடைய சந்தேகத்தை ஊகித்துக் கொண்ட அனுமன் வாலியைக் கொல்ல வல்லவன் தான் புருஷோத்தமனான ராமன் என்றெல்லாம் தேற்றினான். எனினும் மராமரங்கள் ஏழையும் ராமன் எய்ய வேண்டுமென்றான் சுக்கிரீவன்.

கடைசியாக வாலியின் இருப்பிடத்தை நெருங்கி, 'இனி என்ன செய்ய வேண்டும்?' என்று ஆலோசித்தார்களல்லவா? அச் சமயம் ராமன் சுக்கிரீவனை நோக்கி, 'நான் மறைந்து நின்று அம்பு போடுவதாகத் துணிந்து விட்டேன்' என்று சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டுத்தான் சுக்கிரீவன் துணிந்து சண்டைக்கு இழுக்கிறான் வாலியை. இப்படியெல்லாம் நடந்திருக்க, மறைந்து நின்று ராமன் வாலியைக் கொல்லத் துணிந்ததற்கு லட்சுமணன் சொல்லும் காரணம் பொருந்துமா?

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

339. நியாயம் தானா ?

ராமன் சொன்ன வாலிவத 'நியாய'த்தைக் கேட்டோம். லக்ஷ்மணன் சொன்ன 'நியாய'த்தையும் கேட்டோம். எனினும், சுக்கிரீவனுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றுவதற்காக வாலியை மறைந்து கொல்வது அவசியமாகி விட்டது என்பதை எப்படித்தான் நியாயமாக ஒப்புக் கொள்ள முடியும் ?

கம்பனும் வால்மீகியும்

வாக்கைக் காப்பாற்றுவது தர்மம்; சரணமடைந்தவனைக் காப்பது தர்மம். ஆனால் இந்தத் தர்மத்திற்காக எதிரியை மறைந்து நின்று கொல்லும் அதர்மத்தைச் செய்யலாமா ? 'வாலியை மறைந்து நின்றுதானே கொல்ல முடியும்? நேர்நின்று தான் கொல்ல முடியாதே!' என்றால், இது காரியப் பேச்சு; வீரியப் பேச்சுமில்லை, தர்மப் பேச்சுமில்லையே !



இந்த நிலையில் ஆதிகவியான வால்மீகி சொல்வதென்ன ? — கொஞ்சம் பார்க்கலாம். 'போரில் தோற்கடிக்க முடியாத என்னை மறைந்து நின்று கொன்றீர், குடித்து மயங்கி உறங்கிக் கொண்டிருப்பவரைப் பாம்பு கடித்தாற் போல!' என்கிறான் வாலி. ராமன் பதில் சொல்லும்போது, வாலி தர்மத்தைக் கைவிட்ட பாவத்திற்காகத் தண்டிக்கப் பட்டதாய்க் கூறுகிறான். அதே மூச்சில், மிருகங்களை மறைந்து நின்றும் குத்தியடித்துக் கொல்லலாமே என்கிறான். மறுபடியும், வாலி தர்மத்தை உணராமல் கோபங்கொண்டு தர்மத்தை அனுசரிக்கும் தன்னைத் தூஷிப்பதாகச் சொல்லி முடிக்கிறான்.

இந்த வாதத்திலே, ராமன் ஒரே மூச்சில் வாலியைப் பகுத்தறிவுள்ளவனாகவும் பகுத்தறிவு இல்லாத மிருகமாகவும் மதிக்கிறானல்லவா?

இந்த முரண்பாட்டி லிருந்து கதாநாயகனை விடுவிக்க வேண்டுமென்று கம்பன் ஏதாவது முயற்சி செய்திருக்கிறானா? இத்தகைய சந்தர்ப்பங்களில் கதையை மாற்றியமைக்கவும் இந்தப் பிற்காலக் கவிஞன் பின் வாங்குவதில்லையே.

ராமனே தான் மறைந்து நின்று வதஞ் செய்த 'நியாய'த்தை வெளியிடுவதாகக் கம்பன் கூறவில்லை. லட்சுமணன் பதில் சொல்வதாகக் கதையை மாற்றிக் கொண்டிருக்கிறான். இந்த மாற்றத்தைச் 'சாதுரியமாகக் கூறிய நாகரிக முறை' என்று கருதுவோருமுண்டு. ஆனால் இந்தச் சாதுரிய நாகரிக வாதமும் நியாய வாதமாக இல்லையே!

வேறு நியாயம் உண்டா?

'லட்சுமணன் சொன்னதை "நியாய"மாக வாலியே ஒப்புக் கொண்டிருக்கும்போது நமக்கு ஏன் இந்த விவகாரம்?' என்றால், லட்சுமணன் சொன்னதை வாலி ஒப்புக் கொண்டதாய் வெளிப்படையாக ஒன்றும் கவி சொல்லவில்லை.

கவிகுலத் தரசும் மன்னன்
  கட்டுரை மனத்திற் கொண்டான்

என்று தான் கவிஞன் கூறியுள்ளான்.

மனத்தில் கொண்டது, ஒப்புக் கொண்டதாகாது என்பர். வாலி ஒப்புக் கொள்ளவில்லையா? ஒப்புக் கொள்ள வில்லை யென்றும் ஆகாது!-என்கிறார்கள். 'மனத்தில் கொண்டான்' என்றால் 'கேட்டு உள்ளத்தில் வாங்கி வைத்துக் கொண்டான்' என்று தான் பொருள் என்பர்.

இரத்தம் அதிகமாய் வடிந்து உடலும் உள்ளமும் ஒடுங்கி நிற்கின்றன வாலிக்கு. இந்த நிலையைத் தான்

அவியுறு மனத்த னாகி

என்று கவிஞன் குறிப்பிடுகிறான்.

இப்போது வாலிக்கு ராமனைக் குறித்துத் தான் ஏற்கெனவே கேட்டிருந்தது நினைவிற்கு வருகிறது. அதாவது, கடவுளே தர்மத்தைக் காப்பாற்ற ராமனாகப் பூமியில் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டிருந்தான். அந்த நினைவு, இப்போது உள்ளம் ஒடுங்கி நிற்கும் இந்த நிலையில், 'இந்த அவதார மூர்த்தி எது செய்தாலும் அறமாகத் தான் இருக்கவேண்டும்!' என்று வாலியை எண்ணச் செய்கிறது:

அவியுறு மனத்த னாகி,
  'அறத்திறன் அழியச் செய்யான்
புவியிடை அண்ணல்' என்ன
  எண்ணினன்.

[அவியுறு மனத்தனாகி - மனம் அவிந்து அடங்கினவனாகி. அறத்திறன்- அறத்தின் உறுதி. செய்யான் - செய்ய மாட்டான். புவியிடைஅண்ணல் - பூமியிலே (அவதரித்திருக்கும்) ராமன்.]

இந்த மனச் சமாதானத்தால் மனம் மேலும் அடங்கி ஒடுங்க, வாலிக்குத் தன்னறிவு போய் மெய்யுணர்வு பிறக்கிறது. ஊனக் கண் மழுங்க ஞானக் கண் திறக்கிறது. ஆகவே தான் வாலி பின்னர் ராமனை நோக்கி,

ஏவுகூர் வாளியால்
  எய்து,நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய்,
  அறிவுதந் தருளினாய்:
மூவர் நீ; முதல்வன் நீ;
  முற்றும் நீ; மற்றும் நீ;
பாவம் நீ, தருமம் நீ;
  பகையும் நீ; உறவும் நீ!

[ஏவுகூர் வாளியால் - ஏவிய் கூர்மையான அம்பினால். எய்து - (இங்கே) வதஞ் செய்து. நாய் அடியனேன் - நாய் போன்ற அடியேன். ஆவிபோம் வேலைவாய் - உயிர் நீங்கும் சமயத்தில். முற்றும் நீ - எல்லாம் நீயே. மற்றும் நீ - (அப்பாலும் இப்பாலுமுள்ள) மற்றையவும் நீயே.]

என்று விண்ணப்பம் செய்து கொள்கிறான்.

இப்படி யெல்லாம் விவகரிக்கிறார் காலஞ் சென்ற தமிழறிஞரும், கம்ப ராமாயண ரஸிகர்களில் சிறந்த ஒருவருமான திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

மேலும் இவர், எதிரிகளின் பலத்தில் பாதியைப் பறித்துக் கொண்டு அவர்களை வஞ்சகமாய் வென்ற வாலி, 'வஞ்சகன் வஞ்சிக்கப் படுவான்' என்ற வினைப் பெருஞ் சட்டத்தின்படி (Law of karma) அழிந்தான் என்றும் குறிப்பிடுவர். மிருகம்போல நடந்துகொண்ட





வாலி மிருகம்போலக் கொல்லப் பட்டான் என்றும் கூறுவர் திரு வெ. ப. ச. முதலியார்.

இவர் இயற்றியதும், திருப்பனந்தாள் மடத்தின் உதவியால் வெளி வந்திருப்பதுமான 'கம்ப ராமாயண சாரம்' — கிஷ்கிந்தா காண்டத்தில் மேலே சொன்ன விவகாரம் 89-95 பக்கங்களில் விவரிக்கப்படுகிறது. இந்த 'வாலி வத நியாயம்' நியாயம் தானா என்பது வாசகர்களின் ஆலோசனைக்கு உரியது.

பக்தரின் 'நியாய' வாதம்

ஆனால் இந்த அறிஞரின் வாதத்தை வைஷ்ணவ பக்தர்களும் ஒப்புக் கொள்வதாகத் தெரியவில்லை. 'வாலி வதம் நியாயமானதே என்று பண்டிதர்கள் எவ்வளவு பொருத்தமான சமாதானங்கள் சொன்னாலும் கூட, அதை ஏற்றுக் கொள்வது மேட்டு மடையாகவே காண்கிறது' என்பர் பிரபல ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதரான ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

பழைய ஸ்ரீ வைஷ்ணவப் பேராசிரியர்களில் ஒருவரான வேதாந்த தேசிகர், 'ஸங்கல்ப ஸூர்யோதயம்' என்ற தமது சம்ஸ்கிருத நூல் ஒன்றில் கூறியிருப்பதும், ஸ்ரீ அண்ணங்கராசாரியரின் அபிப்பிராயத்தை அரண் செய்கிறது. எனவே இந்தப் பண்டிதர், 'இது நியாயமா, அநியாயமா என்கிற விசாரணை இன்றைக்கும் அருது நிகழ்ந்து வருகின்றது' என்பர்.

அப்படியானால் பக்தர்கள் வாலி வதத்திற்குச் சமாதானம் ஒன்றும் சொல்ல

வில்லையா? சீதையை ராமன் பிரிந்திருக்கும் காலங்களில்தான் வாலி வதம் நடந்திருக்கிறது என்பதை ஸ்ரீ அண்ணங்காராசாரியர் சுட்டிக் காட்டுகிறார்.

இவர் தாடகை வதத்தையும் சுட்டிக் காட்டி, 'முதல் முதலாகப் பெண் கொலை புரிந்தார் என்னும் அபவாதம்' ஏற்பட்டதே அந்தக் காலத்தில் சீதை அருகே இல்லை,—சீதா கல்யாணம் ஆகவில்லையே என்பர். சீதை அருகே இருக்கும்போது வாலி வதம், தாடகைவதம் போன்ற வதங்கள் நடக்கவில்லை யென்பதும், பெருங் குற்றவாளிகளுக்கும் ரக்ஷணமே கிடைத்ததென்பதும் இவர் கட்சி.

இக்கட்சியை ஒருவாறு ஆதரிப்பது போன்ற குறிப்பைக் கம்ப ராமாயணத்தில் காண்கிறோம். ஆம்; ஏற்கெனவே கண்டிருக்கிறோம். அது,

ஆவியைச், சனகன் பெற்ற
அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை

என்று வாலி ஏற்கெனவே சொன்னது தான்.

'என்னை இப்படி அநியாயமாக மறைந்து நின்று வதைக்கலாமா?' என்று கேட்ட வாலிதானே, தன் வதத்திற்குப் 'பொருத்தமான காரண'த்தையும் கண்டு பிடித்து விட்டானும். 'இது ஒரு சமத்காரமான வார்த்தை போலும் என்று நினைக்காமல், இது தான் பரமார்த்தம் என்றே நினைக்கத் தக்க தன்றே?' என்பர் ஸ்ரீ அண்ணங்காராசாரியர். ராமாயண மகாசமுத்திரத்தில் கிடைத்த மகாரத்தினம் இது என்பது இவர் அபிப்பிராயம்.

இன்றைய விவேகிகளின் நிலை

சரி; ஆராய்ச்சி மணிகளும் பண்டித மணிகளும் கானதலைவர் முழக்கிய வண்ணமா யிருக்கின்றனர் வாலிவத நியாயத்தை அல்லது வாலிவத காரணத்தை. எனினும் இந்த 'விசாரணை' நேற்றும் இன்றும்போல் நாளைக்கும் அற்றுப் போகாமல் நடந்துவரும் என்று தான் தோன்றுகிறது.

'ஏன் இந்த விவகாரம், இந்த வாலி வத விசாரணை? ராமன் ஒரு மரத்திற்குப் பின் மறைந்து நின்று எதிரியை அடித்தான் என்றால், நாம் எத்தனையோ மரங்களுக்குப் பின் ஒளித்துக் கொண்டு நம்முடைய எதிரிகளை அடிக்க வில்லையா?' என்றார் ஓர் அரசியல் - பேரறிஞர், சமீபத்திலே.

இந்த நியாய - அநியாய வாதம் வீணானது; ராம காவியத்தைக் கற்கவேண்டும்; அதிலே பிரபஞ்ச நாடகம் காண வேண்டும் என்பது இன்றைய விவேகிகளின் அபிப்பிராயம்.

'உத்தமனுக்கும் ஒரு மறு' என்று வாலிவதத்தைக் கொண்டாலும் சரி; அல்லது ஏதாவதொரு பொருத்தமான காரணம் இருப்பதாக ஊகித்துக் கொண்டாலும் சரி; கம்பனின் 'வாலி வதைப் படல'த்தை நியாய - அநியாய வக்கீல் - வாதங்களுக்கும் சொற்போர்களுக்கும் ஒரு நிலைக்களனாக்கி விட வேண்டாம். ராமகாவியத்திற்குள்ளே ஒரு வாலி காவியமாக அனுபவிப்பது தான் நியாயம் என்று தோன்றுகிறது.

* * *

இந்த 'அநியாய' வதையை விட்டு விடலாமே என்று சிபார்சு செய்கிறார் ஒரு சுயமரியாதை யன்பர். கம்பன் கவிதையே வேண்டாம் என்று கருதுவோருக்கு ஒரு பகுதியை இழப்பது கஷ்டமாகாது தான். ஆனால் காவிய ரஸிகர்களும் அறிஞர்களும் கம்பனின் எந்தப் பகுதியையும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள். 'வாலி வதை'யை இழப்பது நியாயம் இல்லை என்றே துணிவார்கள்.

சித்திர ராமாயணம்

வாலிகாவியம்


340. வாலி குறுதிசயம்

மண்ணுலக சம்பந்தமான காரியங்கள் இப்போது துச்சமாய்த் தோன்றுகின்றன. மகத்தான எண்ணங்கள், — மறு லோக சம்பந்தமானவை — உள்ளத்தின் மகத்தான ஆழத்திலிருந்து உருகி ஊறிப் பொங்கி வருகின்றன.

தாயுள்ளம் தண்டிக்குமா?

ராமன் எதிரியாகவோ, பட்சபாத முள்ளவனாகவோ தோன்றவில்லை. அவதார மூர்த்தியாக, உயிர்க்குலத்திற்கு ஒரு தாயாகத் தோன்றுகிறான். தாய் குழந்தைக்குக் கேடு செய்வதும் உண்டா?

கிணற்றிலே விழுந்த குழந்தைக்காகத் தானும் குதித்து விழுந்தாற் போல், தன் உயிருக்கும் அன்பு செய்ய, அருள் செய்ய வந்தவன் தான் ராமன் என்று நினைக்கிறான் வாலி.



விஷப் பாம்பு தீண்டிய உடற்பகுதியை வெட்டித் தள்ளியாவது தன் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவது தாயின் தருமமல்லவா? இதுவே தான் தன் விஷயத்தில் ராமன் செய்தது, — தாயென உயிரைக் காக்க வந்த ராமன் செய்கையும்!

வேறு விதமாக எப்படி நடந்து கொள்ள முடியும்? தருமமும் நடுவு நிலைமையும் அன்பு - நிறைவும் தானே ராம சொரூபம்? ஸர்வ சாட்சியாக நிற்கும் ஸர்வேச்வரனாகிய புருஷோத்தமனல்லவா? அவனுடைய பேரறிவு எங்கே, பேரருள் எங்கே? நம்முடைய சிற்றறிவு எங்கே?

தெய்வம் நெடிது நோக்கி - அதாவது நெடுங்காலம் உள்பட நோக்கி - ஐயம் திரிபு இல்லாமல் வினைப்பெருஞ் சட்டத்தை (கர்மபல நியதியை), அறிந்து அமலுக்குக் கொண்டு வருகிறதாம். தண்டிப்பது போலவும் அருள் செய்கிறதாம். இந்தத் தெய்வப் பெருவழி அதிசயமானது. சிற்றறிவுகொண்டு அறிய முடியாதது. ஓரளவு அறிந்தாலும், ஐயம் திரிபு ஆகிய குற்றம் இல்லாமல் அறிந்து கொள்ள முடியாது.

இப்படியெல்லாம் வாலி சிந்திக்கிறான். வெகு வேகமாய்ச் சிந்தனைகள் ஓடுகின்றன. தர்ம சக்கரமே உருண்டோடி வந்து, ஏதோ ரண சிகிச்சை செய்வது

போல் உடலைச் சிதைத்து தன் உயிரைக் காப்பாற்றி விட்டதாகக் கருதுகிறான். இந்த ஞானம் - இந்த மெய்யுணர்வு - ராம கடாட்சத்தால் தனக்குக் கிடைத்ததாக நம்புகிறான். அவனருளே கண்ணாகக் கொண்டு கண்டு கொள்கிறானும் இந்த மகத்தான உண்மையை.

மகத்தான வேண்டுகோள்

இந்த நிலையில் தன் குற்றங்களைப் பொறுத்து மன்னித்தருளுமாறு ராமனை வாலி வேண்டிக் கொள்வதை நோக்குவோம்:

'தாயென உயிர்க்கு நல்கித்,
தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி!
நெடிதுநீ நோக்கும் நேர்மை,
நாயென நின்ற எம்மால்
நவையற உணர லாமோ?
தீயன பொறுத்தி' என்றான்,
சிறியன சிந்தி யாதான்.

[உயிர்க்கு நல்கி - உயிருக்கு அன்பு செய்து. தகவும் - நடுவு நிலைமையும். சால்பும் - நிறைவும். நம்பி - புருஷோத்தமனே. நெடிது நீ நோக்கும் நேர்மை - நீண்ட நோக்காக நோக்கி நெடுங்காலம் உள்பட உணர்ந்து செல்லும் நேர்வழி இப்படிப்பட்டதென. நேர்மை - (இங்கே) நேர்வழி. நாயென நின்ற எம்மால் - நாய் போல எளியராய்க் கடைப்பட்டு நின்ற என்னைப் போன்றவர்களால். நவை அற - குற்றங்கள் இல்லாமல். உணரலாமோ - உணர்ந்து கொள்ள முடியுமோ. தீயன - என்னுடைய தீய செயல்களை. பொறுத்தி - பொறுத் தருள்வாய். சிறியன சிந்தியாதான் - (இப்போது ராமனருளால் மெய்யுணர்வு பெற்றுவிட்டதால்) சிறிய விஷயங்களைப் பொருளாகக் கருதாத வாலி.]

சுக்ரீவனின் மகோபகாரம்

மெய்யுணர்வு பெற்ற வாலி ராமனுடைய தெய்வத் தன்மையைத் தெரிந்து மன்னிப்பு வேண்டிக் கொண்டதால் தனக்கு விடுதலையாகிய முக்தி கிடைத்து விட்டதாகவே பரம திருப்தி அடைகிறான். இந்த நிலையில் தம்பி சுக்ரீவன்மீது துளியாவது துவேஷம் இருக்க முடியுமா? தம்பியும் எதிரியல்ல. மகோபகாரி யல்லவா?

தன்னைக் கொல்ல எதிரியைக் கொணர்ந்த தம்பியைக் குறித்துச் 'சிறியன சிந்தியாத' வாலியின் பெருநினைப்பை, பெரிய மனசைப் பாருங்கள்:

மற்(று) இனி உதவி உண்டோ?
வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ! நின்னை என்னைக்
கொல்லிய கொணர்ந்து,
தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடும்
தெரிவுறச் செய்த செய்கை—
வெற்றர செய்தி எம்பி,
விட்டர செனக்கு விட்டான்!

[மற்று இனி உதவி உண்டோ - இதைக் காட்டிலும் மேலாக வேறு உபகாரமும் உண்டோ. வானினும் உயர்ந்த மானக் கொற்றவ - வானத்தைக் காட்டிலும் உயர்ந்த பெருமை வாய்ந்த வெற்றி வீரனே. நின்னை - உன்னை. கொல்லிய - கொல்லும் பொருட்டு. தொல்லை - பழமையாக. சிற்றினக் குரங்கினோடும் - சிறிய இனமாகிய குரங்குகளுடனே. தெரிவுறச் செய்த செய்கை வெற்றரசு - அபேதமாய்த் தெரியும்படி செய்த செய்கைகளையுடைய வீணை வானர ராஜ்யம். எம்பி - என் தம்பி சுக்கிரீவன். வீட்டரசு - மோட்ச ஸாம்ராஜ்யம்.]

வீட்டரசைத் தனக்கு விட்டு அதற்கு ஈடாக வெற்றரசைத் தான் பெற்றத் திருப்தியடைந்து விட்டானும் சுக்கிரீவன். அந்த நினைப்பிலே வாலி எவ்வளவு தூரம் தன் பழைய பகைமை - நிலைமையிலிருந்து மாறி விட்டான் பாருங்கள்!

தம்பிக்கு வாலி உபகாரம்

இனி வாலி ராமனை ஒரு வரம் வேண்டுகிறான்.

ஓவிய உருவ! நாயேன்
உளதொன்று பெறுவ(து)உன்பால்

[ஓவிய உருவ - சித்திர வடிவம் வாய்ந்த ராமா. நாயேன் - நாய் போலும் அடியேன். உளது ஒன்று பெறுவது உன்பால் - உன்னிடம் பெற வேண்டிய வரம் ஒன்று உண்டு.]

என்ற பீடிகையுடன் வரம் கேட்கிறான்.

இதிலிருந்து, வாலி ஏதோ தனக்காகவோ தன் குடும்பத்திற்காகவோ வரம் கேட்கப் போகிறான் என்று நினைக்கக் கூடும். அதுதான் இல்லை. வாலி சுக்கிரீவனுக்காகத்தான் இப்போது வரம் வேண்டுகிறான். என்ன வரம் தெரியுமா? பாட்டு முழுதும் பார்க்கலாம்:

'ஓவிய உருவ! நாயேன்
உளதொன்று பெறுவ(து) உன்பால்:
பூவியல் நறவம் மாந்திப்
புந்திவே(று) உற்ற போது,
தீவினை இயற்று மேனும்,
எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும்
கூற்றினை ஏவல்!' என்றான்.

[பூ இயல் நறவம் - மலர்களிலிருந்து உண்டான மது; (இங்கே) கள். மாந்தி - குடித்து. புந்தி - புத்தி. வேறு உற்றபோது - மாறி மயங்கியபோது. தீவினை இயற்றுமேனும் - குற்றம் செய்வானானால். பகழி என்னும் கூற்றினை - பாணமாகிய அம்பை. ஏவல் - ஏவாதிருப்பாயாக.]

வாலி சொல்லுகிறான்: 'என் தம்பி இயல்பாக நல்லவன்தான்; தீவினை இயற்றக்கூடியவனல்ல. ஆனால் மதுபானப்பழக்கம் சற்று அதிகம். எனவே குடித்து வெறிகொண்ட நிலையில் - கள்ளை உள்ளே தள்ளி உள்ளத்தை, மதியை, வெளியே தள்ளிய நிலையில் — ஏதாவது குற்றஞ் செய்யவும் கூடுமே! அப்படிச் செய்வானானால் அதற்காக அவன்மேல் சீறி, என்மேல் நீ ஏவிய பாணத்தை ஏவாதிருக்க வேணும்!'

ராமபாணத்தின் குறி தவறாத கொடிய சக்தியை உணர்ந்த வண்ணம் பேசும் பேச்சல்லவா? ராமன் அம்பு



தன் நெஞ்சைத் துளைக்கும் இந்த மரண வேதனையிலும் இப்படி வரம் வேண்டுகிறான். தன்னைக் கொல்வித்த தம்பியின் நன்மையை நாடுகிறான்.

'கல்நெஞ்சு படைத்தாரும் கனிந்துருகிக் கண்ணீர் சொரியும்படி, வாலியின் பேரன்பும் பெருந்தகைமையும் விளங்கக் கூறியிருக்கும் வித்தகக் கவிநயம் மிகவும் பாராட்டத்தக்கது' என்பர் நவிகரும் தமிழறிஞருமான திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

சுக்கிரீவனுக்காக இப்படி வரம் கேட்ட வாலியின் இந்த மனநிலை சுக்கிரீவனைப் பிரமிக்கச் செய்து, அனுமனையும் பிரமிக்கச் செய்திருக்கவேண்டும். லட்சுமணனும் பிரமித்துப் போயிருப்பான். ஏன், ராமனும் வியந்திருக்க வேண்டிய பெருந்தகைமையல்லவா?

வாலியின் மனக் குறை

ஆனால், இதற்கும் மேலாக ராமனையும் பிரமிக்கச் செய்யும் வார்த்தை ஒன்று, மரண வேதனையிலிருக்கும் வாலி வாயிலிருந்து வெளிப்படுகிறது:

'மற்றிலேன், எனினும் மாய
அரக்கனை வாலிற் பற்றிக்
கொற்றவ! நின்கண் தந்து
குரக்கியல் தொழிலும் காட்டப்
பெற்றிலேன்? கடந்த சொல்லின்
பயனிலை; பிறிதொன் றேனும்,
உற்றது செய்கென் றாலும்,
உரியன் இவ் அனுமன்' என்றான்.

[மற்று இலேன் எனினும் - பிரமாதமாக வேறொரு உதவியும் செய்ய இயலாதவனாயினும். கொற்றவ - வெற்றி வீரனே. நின்கண் தந்து - உன்னிடம் ஒப்பித்து. குரங்கு இயல் தொழில் - குரங்காகிய என்னால் இயலும் தொழில்; அதாவது, விரைந்து தாவிப் போய் விடாப் பிடியாகப் பிடித்து வரும் செயல். பெற்றிலேன் - பாக்கியம் பெற்றேனில்லை. கடந்த-கடந்துபோன விஷயங்களை. சொல்லின் - சொல்லுதலால். பயன் இலை - பயன் ஒன்றும் இல்லை. பிறிது ஒன்றேனும்-வேறொரு செயலைச் செய்க என்றாலும். உற்றது செய்க என்றாலும் - ஆக வேண்டியதான இந்தச் செயலைத்தான் செய்க என்றாலும். உரியன் இவ் அனுமன் - இந்த அனுமன் செய்து முடிக்க உரியவன்.]

'பிரமாதமாக நான் என்ன உதவி உனக்குச் செய்யத்தான் முடியும்?' என்று தொடங்குகிறான் வாலி. 'அந்த மாய ராட்சஸனை — அந்த வஞ்சகப் பேர்வழியை — ஒரே தாவாகத் தாவிப் போய் வாலில் சுற்றி எடுத்துக்கொண்டு வந்து உனக்குப் பாத காணிக்கையாக வைத்திருப்பேன்! கொடுத்து வைக்கவில்லை. அப்படிக் காணிக்கை வைத்து "இந்த அற்பக் குரங்கு செய்யக்கூடிய சொற்பப் பணி இது!" என்று சொல்லிக் கொள்ளும் பாக்கியம் பெற்றேனில்லை' என்கிறான்.

ஆனால் கடந்து போன விஷயங்களைச் சொல்லிப் பயன் என்ன? எனவே 'அனுமன் இருக்கிறான் கைங்கரியம் செய்ய' என்று ராமனை நோக்கிக் கூறுகிறான். சுக்கிரீவனை அவ்வளவு தகுதி வாய்ந்தவனாகச் சொல்லிக் கொள்ள முடியவில்லை.

'உன்னுடைய வில்லைப் போல் அனுமனை நினைத்துக் கொள்வாய்' என்கிறான், 'சிறியன சிந்தியாதான்'.

'என்ன குணாதிசயம்!' என்று அதிசயப்படுகிறீர்களல்லவா? இப்படி வாலி காவியத்தை உருவாக்கியிருப்பது கம்பனின் மேதை. சாதாரணமாக ராமாயணக் கதையில், ராவணனோடு அக்கினி சாட்சியாக நட்புரிமை பூண்டவன் வாலி. உயிரோடிருந்தால் ராம ராவண யுத்தத்திலே ராவணன் பக்கம் நின்று போர் புரிந்திருப்பான்!

அப்படிப்பட்ட வாலியின் மரணக் காட்சியைக் 'கல் நெஞ்சு படைத்தாரும் கனிந்துருகிக் கண்ணீர் சொரியும்படி' இயற்றித் தந்திருக்கும் கம்பனின் மேதாவிலாசம், 'காவியத்திற்குள் காவியம்' என்று சொல்லும்படி ஒரு வாலி காவியத்தையும் தந்திருக்கிறது.